693
294.535

உ

கணபதி துணை.

திருமெய்யம் ஈச்வரன் கோவில்

ஸ்தலபுராணக் கீர்த்தனை.

இஃது

புவனேக வீரபாண்டியபுரமென்னும்

மழவாபுரியிலிருக்கும்

திருவிளையாடல் கீர்த்தனஞ்செய்த

சுப்பிரமணியபாரதியவர்கள்

வடமொழியிலிருந்து தமிழில் மொழிபெயர்த்து

இயற்றியது.

புதுக்கோட்டை சமஸ்தானம் இராயவரம்

மாத்தூர்க் கோவில்

மகா-ா-ா-ஸ்ரீ

வே. மு. முத்துக்கருப்பஞ் செட்டியார் புத்திரர்களில்

ராமஞ் செட்டியார் புத்திரர்

முத்துக்கருப்பஞ் செட்டியாரவர்கள் முயற்சியால்

அரங்கேற்றிவைத்து

ஷெடியார் புத்திரர்

வேலஞ்செட்டியாரவர்களால்

முதல் பதிப்பு பதிப்பித்தும்

சிலர் வேண்டுகோளின்படி ஷெடியார்கள் குமாரர் மகா-ா-ா-ஸ்ரீ

இராமனாதஞ் செட்டியாரவர்களால்

இரண்டாவது பதிப்பாக

காரைக்குடி

பாஸ்கரன் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றது.

விபவஹு தைமீ.

14992 தென்னை-600 098

சாற்றுக்கவிகள்.

புவிசேனக வீரபாண்டியபுரமென்னும்
மழவாபுரி சதாவதானம்
சுப்பராம அய்யர் கனிஷ்டர்
சிதம்பரபாரதியவர்கள்
இயற்றியது.

சத்தியணி வேல்க்கடவு டன்னே அருள் அருவுருவாந் தாணுஅன்பாஞ்
சத்திஅகி லாண்டமெல்லாந் தந்தருளும் வேணுவனேச் வரியோடுற்ற
சத்தியகி ரீச்வரர்வாழ் சத்தியமா வலப்பெருமை தனையுரைத்தான்
சத்தியனும் மழவைச்சுப் பிரமண்ய பூசுரனகீர்த் தனமாய்த்தானே.

ஷியூர் சதாவதானம்
வாலசுப்பிரமணிய ஐயரவர்கள்
இயற்றியது.

பூதலத்திற்கிரியுள்அன்பர் பிறப்பொழித்துப் பெரும்பெருமை பொருந்தலா
யீதொன்றே சத்தியகிரி யெனநாமம் புனைந்தத்த னெறிலேயெங்கள் [லே
மாதவனுந் தென்மழவைச் சுப்ரமண்ய பூசுரர்கோ மான்வாழ் வோங்கிக்
காதிதருங் கீர்த்தனமாய் உரைத்திலகுய் யக்காட்டிக் களித்தான்மாதோ.

இந்தநூல்செய்த
சுப்பிரமணிய பாரதியவர்கள் கனிஷ்டபுத்திரர்
ராமசுவாமி ஐயரவர்கள்
இயற்றியது.

திருமெய்ய ஸ்தலத்திலன்ன தானசத்திரஞ்
சிவஸ்தலவிஷ் ணுஸ்தலசீ ரணந்திருத்திப்
பெருமைபெறு ஸ்தலமான்மி யக்கிரந்தம்
பெருந்தமிழ்க்கீர்த் தனமாகப் பேசச்செய்து
வருமிரா யபுரத்தில்வளர்முத்தைய
வணிகன்விசு வேசரடி மருவஅன்னோன்
தருபுதல்வன் வேலப்ப வணிகனிந்தத்
தமிழையரங் கேற்றிஅச்சிற் ருபித்தானே.

சென்னபட்டணம்
வித்தியாவர்த்தனி அச்சுக்கூடத்தலைவர்
தஞ்சைமாநகரம்-சதாவதானம்
சுப்பிரமணிய ஐயரவர்கள்
இயற்றியது

பூமலிந்த புனல்வாவி புடைமலிந்த திருமெய்யப் புராரிகோயின் [விற்
மாயலிந்த மான்மியத்தை வடசொல்லினின்றெடுத்தவ் வழிதென்சொல்
றேமலிந்த வின்னிசைசேர் கீர்த்தனையா மழவைநகர் செழிக்க வாழ்வோன்
பரமலிந்த நாவலவன் சுப்ரமண்ய விப்பிரர்கோ பகர்ந்தான் மாதோ

சிறப்புப் பாயிரம்.

இஃது

இந்நூலாசிரியரின் பூர்வீகஸ்தலமாயும் புவனேக வீரபாண்டிய புரமென்ற பிரதிநாமமுடையதுமான மழவாபுரிச் சிதம்பரபாரதிகளின் கனிஷ்ட குமாரன் சுப்பராமய்யரென்ற இராமசாமியய்யரால் இயற்றப் பெற்றது.

நிலமண்டில ஆசிரியப்பா.

திருவுயர் கூடற் றென்னவன் றழைக்க
மருவுமீ னம்பிகை வகித்திடுஞ் செங்கோல்
செழித்திடும் பாண்டிய தேசமத் தியினிற்
கொழித்திடும் பல்வளங் குணமொடு விளங்கும்
புதுக்கோட் டையெனும் புகழ் சமஸ்தான
மதிப்பொடு மிலங்க வரதையெம் மம்மை
ப்ரகதம் பிகையருள் பெற்றிடுந் தாசர்
அகமகிழ் தொண்டமா னரசர்கள் குலங்கள்
செங்கோல்வகித்துத் திகழ்ந்திடும் நீதி
யெங்கும் விளங்கிட வினிதுடனளிக்கும்
நகர்களிற் சிறந்த நடுநா யகமா
மகிமையார் திருமெய்ய மாண்புறு பெயரும்
சத்திய கிரியெனச் சருவுமற் றொருபெயர்
ஒத்திட வகித்திட வோங்குமந் நகரினிற்
சூழ்ந்திடு கோட்டையிற் றோன்றிடுந் தக்கிண
மார்ந்தபா கத்தி லமையருள் பாலன்
வல்லப கணபதி மால்மகி ழனுமான்
அல்லும் பகலு மமர்ந்திரட் சணைசெய
வடபா கத்தினில் மன்னியே வைரவர்
திடமுட னின்றுந் தினந்தினங் காத்திடும்
மகிமையு மோங்கு மதியினிற் களித்த
தகுதியாந் தக்கனின் சாபமும் விலகிச்
சோடச கலையுறத் தோன்றிடச் சந்திரன்
பீடுறுஞ் சந்திரப் பெயர்புட் கரணி

யோர்புற மிலங்கமற் றோர்புறந் தன்னில்
மார்பினி லிலக்குமி மருவுகொண் டல்வணன்
காலநே மிதனைக் காய்ந்ததாற் பெற்றிடும்
மூலமா மத்தி முழுதையு மீசன்
போக்கிச் சடாவெனும் புண்ணிய தீர்த்தமுண்
டாக்கிட வப்பெய ரமர்மகி மையுமுறும்
சத்திய தேவதை சந்திரன் மால்புகழ்
சத்திய முயரரிச் சந்திரனும் வரப்
பெற்றிட மால்தனைப் பெருமையோ டீசன்
உற்றதம் பக்கமு மோர்ந்திடச் செய்தனன்
தலமதி லுபர்சிவ தாசனுந் தொண்டு
நலமொடு செய்துமந் நாளினில் முக்தியும்
நாடினனத்தல நாதனு மீசனை
நீடியே சத்யகி ரீசனென் றோதிட
யெம்மையை வேணுவ னேஸ்வரி யென்றே
செம்மையா யிம்மூஜ் ஜகத்திலுங் கூறிட
நாமங்கள் தம்மை நலமொடு மடைந்து
க்ஷேமமாய் எந்த ஜெகத்தையு மளிப்பான்
பாண்டிய நாட்டுட் பலநல வளங்களும்
பூண்டிடு மழவா புரியினில் மறையவர்
குலத்தில் வாதூல கோத்ரோத் பவன்றிரு
நலத்தினன் சுந்தர நாமன் றநசுதன்
சுப்பிர மணியன் றொல்புவி புகழ்தமிழ்
அற்புதக் கடல்தனை யருந்திட விளங்கினன்
திருவிளை யாடற் றிருக்கீர்த் தனத்தையும்
மருவிசைத் தமிழ்பல வழங்கும்நூல் களையும்
செய்து விளங்கினன் றிருமெய நகரினிற்
பையரா வணிந்திடும் பஞ்சா னனனும்
ஸத்யகி ரீசனுந் தரணியை யீன்றதாய்
நித்யையாம் வேணுவ னேச்வரி யமையும்
மகிழ்ந்திட வவர்கதை மங்கள மாகப்
புகழ்ந்துமென் னாட்டிலும் போற்றுகீர்த் தனங்களாய்
செய்து விளங்கினன் சிறப்புயர் புதுவையில்
ராஜமாணிக்க நல்லூ ரெனத் திகழ்
ராஜ புரத்தெந் நாளிலும் விளங்கினன்

நந்நகரதனில் நாட்டுக் கோட்டையார்
பன்னலம் பெருமணி பாக்கிய முற்றவன்
வணிகரின் குலத்தினில் மாத்தூர் கோயிலிற்
கணியெனஜ் ஜனித்துமந் நாட்டுறு மரசர்கள்
யாவரு மகிழ்நல மெவையு மடைந்தனன்
பலபல தர்மமிப் பாரினி லோங்கிடக்
குலவிடச் செய்தான் கோயிலை யந்நகர்
தன்னிலு மமைத்துத் தலத்திரு மெயமதில்
பன்னகா பரணனும் பன்னக சயனனும்
மகிழ்ந்திடக் கோயில்கள் மகிழ்திரப் பணிகளைச்
சகந்தனிற் புகழ்வுறச் செய்துமந் நகரினில்
அன்னதா னந்திக ழணிசத் திரம்பெறு
தன்னையு மமைத்திடச் சாஸ்தயன் கோயிலின்
திருப்பணி தன்னையுஞ் செய்திடுந் தர்மவான்
கருத்தினி லரனுமை கழன்மலர் பதித்தவன்
முத்துக் கருப்பனு முதற்பெய றுற்றவன்
சத்துவ நற்குணன் றறுவே லப்பன்
ஸத்ய கிரீசன் றலபுரா ணந்தனை
எத்தலங் களினினு மெழுதா வெழுத்தினில்
ஒங்கிட முதற்பதிப் புற்றிடச் செய்தனன்
தேன்கொளக் கீர்த்தனத் திருப்பு ராண முமினும்
பன்னுள் விளங்கிடப் பரமன் க்ருபையினை
எந்நாட் களினினு மினிதுடன் பெற்றுப
அவ்வே லப்பற் கமைந்ததோன் றல்களினிற்
றிவ்விய சுணனும் ஜகம்புகழ் வள்ளல்
தனத்தினிற் றனதன் ஸஜ்ஜனர் தனதன்
வனத்தினிற் குபர்வன மருவரன் மெருண்டன்
மறையவர் பதமலர் வகித்திடுஞ் சிரத்தினன்
குறைவிலா நலபுயர் குமரர்க ளுற்றவன்
ராமநாதனும் நற் பெயர் தாங்குவோன்
பூமியிற் குயர்குணன் புண்ணிய வணிகன்
இரண்டாம் பதிப்பா யெழுதா வெழுத்தினிற்
பரம்பொருள் க்ருபையுறப் பதித்தோங்குவனே.

OFFICE OF THE REGISTRAR
25 JUN 1929
MADRAS

அடியார் சகோதரர் அஷ்டாவதானம் சுந்தரமய்யரவர்கள் குமாரர்
காரைக்குடி தமிழ்ப்பண்டிதர் சு. சிதம்பரமையரவர்கள்
இயற்றியன

விருத்தம்.

சீர்மேவு மடியார்மனத் தாமரையும் பலதலமுஞ் சிறந்தே நிற்கும்
ஏர்மேவு முமைபாகன் வேணுவன நாயகியை யிடமாக் கொண்டு
நார்மேவு சத்யகிரிக் கடவுளென வருள்சுரந்து நல்லோர் போற்றப்
பார்மேவு திருமெய்யத் தலமதனிலென் றுளும் பண்பாய்வாழ்வான்

அத்தலத்தின் மகிமைதனை யெல்லோருங் கொண்டாடி யன்பாய்
வாழ்த்தப்
புத்தமுது நிகரெனவே கீர்த்தனைபாச் செய்துபல புகழுங்
கொண்டான்
அத்தகையோன் றிருவிளையாடலுடனே பலநூலு மாக்கி
பேனுள்
இத்தரையோர் தமக்குதவி செய்தசுப்ர மணியமா லென்போன்
றானே
அன்னான்செய் கீர்த்தனையை மறுமுறையு மச்சிடுவித் தழகே
செய்யத்
தன்னலா முயற்சிபுரி கிருஷ்ணனெனு மவன் பேரன் றன்னைக்
கண்டு
முன்னோர்போற் பொருளுதவி ராமநா தப்புனிதன் முற்றச்
செய்தான்
இன்னோனு மற்றவரு மிந்நூலும் பலகால மினிதேவாழ்க.

இந்நூலை இரண்டாவது பதிப்பாக வெளியிட்ட மகா-ள-ள-ஸ்ரீ வெ. மு. ராம. வேலஞ் செட்டியாரவர்கள் குமாரன் ராமநாதஞ் செட்டியாரவர்களுக்கு.

இந்நூலாசிரியர் பௌத்திரன் திரு. சு. சு கிருஷ்ணய்யர் கூறிய நல்வாழ்த்து.

வெண்பா.

சத்யகிரி மான்மியத்தைச் சற்சனரெலாம் புகழ
சத்யகுண ராமநா தப்பெயரோன்—தத்துவமாய்
இச்சித்த பாவலர்க்கு நாவலர்க்கு மின்பமுற
அச்சிற் பதித்தா னறிந்து

வடக்குவாசல்கோட்டை
வயிரவர்.

தெற்குவாசல்
அனுமார்,

மூங்கில்வனம்.

அட்டவணை.

கடவுள் வணக்கம் வெண்பா - உ
(விருத்தம் - ச. பதம் - கூ.
அவையடக்கம் விருத்தம் - உ. - பதம் க.
புராணவரலாறு விருத்தம - உ - பதம் உ.
ஸ்தலவிஷேசம் விருத்தம் - க - பதம் - க.
தீர்த்தவிசேஷம் விருத்தம் - க. - பதம் - க.
மூர்த்திவிசேஷம் விருத்தம் - க. - பதம் - க.
சத்தியதேவதை வரம்பெற்ற அத்யாயம் விருத்தம் - ரு பதம் - உ.
மகாவிஷ்ணு வரம்பெற்ற அத்யாயம் விருத்தம் - உ பதம் - உ
சிவதாஸர் முத்திபெற்ற அத்யாயம் விருத்தம் - கரு பதம்-கச
சந்திரன் வரம்பெற்ற அத்யாயம் விருத்தம் - அ பதம் - கூ
[அகவல்-க
அரிச்சந்திரன் வரம்பெற்ற அத்தியாயம் விருத்தம் - எ பதம் - ச
ஆக அத்யாயம் ரு - க்கு விருத்தம் - சகூ
பதம் ச௰ வெண்பா உ அகவல் க ஆக கூ0



வல்லபாகணபதி
தெற்குவாசல்க்கோட்டை.

சத்தியகிரீஸ்வரர்
வேணுவணேஸ்வரி

சுப்பிரமணியர்

உ

மகாகணபதி துணை.

சிவமயம்.

சத்யகிரீச்வரர். வேணுவனேச்வரியம்மன்.

திருமெய்யம் ஈச்வரன்கோவில்

ஸ்தலபுராணக்கீர்த்தனை.

விநாயகர் துதி.

விருத்தம்.

மங்களமெய்க்கருமலைவெண் மலைமகட்கன்
பாமருள்சேர் செம்மலையான் வழுத்துதற்கு
அங்கண்மூன் றுயர்நால்வா யைவெண்கோடோங்
கங்குசபாசந்திகழ வரனயன்மால்
தங்களொடுசக்தியுமோர் தனுவாயுற்ற
தனிமையெனத்தோன் றியுற்றோர் தாழ்வுதீர்க்கு
மெங்கள்திருமெய்யநகர்க் கோட்டைவாச
லெழில்விநாயகன்பதத்தை யிறைஞ்சுவேனே.

பதம்—ராகம் நாட்டை—தாளம் சாப்பு.

பல்லவி.

சரணம் மகாகணபதே—சரணம்—சரணங் கிருபாநிதே.

அநுபல்லவி.

பரமவரபுத்ரா பக்தஜனமித்ரா (சரணம்)

சரணங்கள்.

இதஸேவிதரட்சணு ஜம்பூபல இட்சுமோதகபட்சணு
மதகெஜானன துரிதமோசன வரதவாமன ரூபலட்சண (சர)
அரபாவனவந்தித பார்வதிஸுத அம்போருகசிந்தித
ஸுரகணுதிப நடனசோபித ஸுமுகசோபன விபுதஸேவித (சர)
பவபாபவிநாசனு நிகிலஜகத் பரிபாலவிலோசனு
நவரஸாமிர்த மதுரவாசக நயவிபமுகா ஸுரவிஞசன (சர)

ஸத்யகிரீச்வரர்ஷ் துதி.

விருத்தம்.

தாணுவனத்தனையடர்ந்து சங்கரிக்குச்சத்தியவெற்பிற்
காணுவனத்தனையனுக்காய்க் காலனைக்காயந்தவனையுயர்
வாணுவனத்தனைவிழி மணிமிடற்றுட்கிடமருளும்
வேணுவனத்தனையலர்த்தாள் மிலேந்திடுமென்விரைமுடியே.

பதம்—ராகம் தேவகாந்தாரி—தாளம் ஆதி.

பல்லவி.

ஸத்யகிரீச—அர—சம்போசங்கர (ஸத்ய)

அநுபல்லவி.

நித்யநிர்ம்மலநிரஞ் சனநிராதாரஅர (ஸத்ய)

சரணங்கள்.

அகண்டிதஜகத்ரூபா அரிஸேவிதப்ரதாபா
ஸகலதேவசரண்ய ஸந்ததகாருண்ய (ஸத்ய)
விபவவரதாயக விகிதஅரிஸாயக
அபயவரதஅஸ்த ஆப்தரெட்சககர்த்த (ஸத்ய)

கங்கண நாகநீல கண்டஸத்யசைல
மங்களகரவேணு வனேச்வரிநாதஸ்தாணு (ஸத்ய)

வேணுவனேச்வரி ஸ்துதி.

விருத்தம்.

சத்யமலையெவர்க்குமுன்னுந் தலைவனெனநான் மறையன்று
சத்யமலையிருபுயத்தற் பரனைநீங்காத்தனியங்கு
சத்யமலைகடல்வளையித் தரணிபுகழத்தழைத்துயர்ந்த
சத்யமலைவேணுவனேச்வரி தாண்மலரென்றலைக்கணியே.

பதம்—ராகம் பியாகடை—தாளம் ஆதி.

பல்லவி.

ஸ்ரீவேணுவனேச்வரி தேவிஜகதீச்வரி யம்பா (ஸ்ரீவே)

அநுபல்லவி.

ஸேவிதஜனபரிபாலகிருபாகரி
ஸ்ரீஅரிஸோதரி ஆதிபராத்பரி (ஸ்ரீவே)

சரணங்கள்.

ஜகத்ஸர்வசராசரதாயகி திவ்யாத்புதஸ்வரவரகாயகி
ஸகலாகமவேதவிதாயகி ஸர்ப்பாபரணிஜகந்நாயகி (ஸ்ரீவே)
மாஹேச்வரி ஹரிப்ர்ம்மாதி வந்திதபதயுகளீ பரஞ்சோதி
நீயே ஜகதாதியனாதி நிமலிதிவ்விய வரப்ரசாதி. (வேணு)
புவனேச்வரிமாசிவகாமி புரஸத்யபுராதிப நேமி
பவஸத்ய கிரீச்வரர்வாமி பக்தார்த்திபஞ் சனியபிராமி (ஸ்ரீவேணு)

ஸுப்ரமண்யர் ஸ்துதி.

சந்தவிருத்தம்,

வடகுவடு கிடுகிடென வெழுகிரிகள் நிலைபிசக
வளைகடல்கள் சுவறமதி கதிர்கள்கதி தாழ
திடவசுர ருடல்பிளவு படவமரர் மகிழ்வுயர்
திசைமத கரிகள்பதற முனிவர்துதி கூறச்
சுடர்விசறி வடவையன லெனவுமுக முடிவில்மிகு
தொகைகொள்புவி பொழியவிழு மிடிகளென நூறு

மடருமயில் தொடுகுமர முருகசர வணபவயிவ்
வதிமதுர கவியருளி மயிலில்வரு வாயே.

பதம்—ராகம் தர்பார்—தாளம் ஆதி.

பல்லவி.

மயிலேறுமுருக-யெனதுமுன்வருக-மனதில்நினேத்தவரந் தருக.

அநுபல்லவி.

அயிலணிந்திடுநேயா அம்பிகைதருஞ்சேயா
அந்தமிகுந்த துரந்தர ஸுந்தர (மயிலேறுமுருக)

சரணங்கள்

அடருமசுரகுல காலா மன தஞ்சுமவர்கட்கநு கூலா
கடவுளர்பணி தாளா காக்குங்கருணே யாளா
கந்தமகிமைபெறு கந்ததுயருகன
கந்தமிகுகடம்பு கந்தபன்னிரு தோளா (மயிலேறு)
ஸந்ததமுன்சர ணுகதியேயிந்தத் தரணியிலெவரையு மதியேன்
உந்தன்புகழேபாடி யுலகமெங்குங் கொண்டாடி
உம்பருமகிழ நயம்பெறு கவிக
ளியம்பவருள்செய்மிக அன்புபெருகி நாடி (மயிலேறு)
தேசமகிழ்மெய்ய புரேசா அன்பு செய்யும் அடியவர்கள் நேசா
மாசறுமிகுபுண்ய மாதவர்புகழ் கண்ய
வல்லிதெய்வானேயெனு மெல்லியர் நயமொழி
சொல்லிமயலினெடு புல்லும்ரூபலா வண்ய (மயிலேறு)

தோடையம்.

வெண்பா.

வேணுவ னத்தன் விழைந்தேத்தச் சத்யவெற்பிற்
காணுவனத் தன்சங் கரிபாகன்—தாணுவருள்
நாடயஞ் சொல்நன் னயவிரா கத்தினிய
தோடயஞ் சொல்வேன் துணிந்து

நாட்டை ராகம்—தாளம் ஜம்பை.

பல்லவி.

ஜெயஜெயா.

புகழ்வளரு முயர்ஸத்ய புரஸ்தல விசேஷமிதை
அகமகிழ்வி னெடுஸ்துதித்து அனுதினமுங் கூற

மகபதியுமுனிவர்களு மகிழ்ந்து தினம்புகழ் மெய்ய
நகர்க்கோட்டைவாசலின் விநாயகன் றுணையே (ஜெயஜெயா)
எத்திசையும் புகழ்ந்தேத்து மெழில்மெய்ய நகர்விசே
ஷத்தை மாநிலமெங்குந் தழைக்கவே கூற
வெற்றிதந் தருளுமுயர்வேணு வனேச்வரி பாகர்
சத்யகிரீ ச்வரருபய சரணமலர் துணையே (ஜெயஜெயா)
தேசமெங்கும் புகழுந்திகழ் ஸத்யஸ்தல மகிமை
ஆசையுடனே யென்றும் அருந்தமிழிற் கூற
ராஜராஜேச்வரியை நாளுமிடப்பாகம் வைத்த
வாசவன் புகழ்வான மாமதீசர் துணையே (ஜெயஜெயா)
புண்யமிகுந்திடு ஸத்யபுர ஸ்தலவிசேஷ மிதைக்
கண்யமுடனே யெவருங் கருதவே கூற
வண்ணமயில் வேலவரு மகிழ்வுமிகும் அடியாரும்
யெண்ணம் அருள் கலைமகளு மென்னாளுந் துணையே (ஜெயஜெயா)

மங்களம்.

வெண்பா.

கோபாலன் கோவிந்தன் கோகநக னேவென்று
மாபால னஞ்செய்பு மாதேவன்—பூபன்மா
னத்தன் பொன் னங்கமலை நாதனுபருமா
கத்தனருள் வன் மங்களம்

ராகம்—பந்துவராளி—தாளம் சாப்பு.

மங்களம் மங்களம் ஜெயா ஜெயமங்கள மங்களம்.

மங்களங்கனக துங்கமேரு தரசங்கரா அரஸுரேசா
பங்கஜாஸன வியங்கநாயக துரங்கமாதவ கைலாஸ (மங்களம்)
காலகால ஆல காலபோஜனனு கூலசீலநட லோலா
பாலசந்திரதர நீலகண்டமுனி பாலரெக்ஷக த்ரிசூலா (மங்களம்)
தாயகாமு குந்தஸாயகா பரதகாயகா கன விநோதா
நேயஸஜ்ஜன ஸஹாயவேணுவன நாயகிப்ரிய விநோதா. (மங்களம்)
நிர்த்தபக்தஜன சித்தஇற்கத விசித்ரநித்ய உல்லாஸா
கர்த்தருத்ரமிர்க அஸ்தஉத்தம களத்ரஸத்ய சைலேசா (மங்களம்)

அவையடக்கம்.

விருத்தம்.

புங்கவ ராருமைக்கருள வஃதைநந்தி
புகழ்ஸனத்குமாரர்க்குப் புகலக்கேட்டு
அங்கவரன் புள்ளவியா சர்க்குக் கூற
வவர்ஸூதர்க்கோதியமூ வறுபுராணத்
துங்கவரநூலினுயர் ஸ்காந்தந்தன்னிற்
சொல்லுமுமாமகேஸ்வரஸம் வாதத்துற்ற
திங்கமாஸத்யக்ஷேத்ர மகாத்ம்யமீ
தெழிற்சூதர்மிகுமுனிவர்க் கிசைத்ததாமால் (க)
முற்பகரும்வடநூலைத் தமிழ்நூல்தன்னில்
மொழியுங் கீர்த்தனங்களாய் முடியென்றன்பாய்ப்
பொற்புயருமெய்நகர் தனில்மிக்கோர்கள்
புகலவவருரைத்தபடி புகன்றேன்வாடாக்
கற்பகமாமலர்க்கெதிரே நெட்டிமாலை
களைநிகராகக்காட்டுங் கருத்தேன்கூறு
நற்பகவன்சரிதையிதைப் பிழையகற்றி
நாட்டுவீரன்பொடுபா ராட்டுவீரே (உ)

பதம்—ராகம் பியாக்கு—தாளம் ஆதி.

பல்லவி.

பிழைபொறுப்பீரே-பெரியோர்கள்நீரே-பிழை.

அநுபல்லவி.

தழையும்ஸத்யசைல-ஸ்தலவிசேஷம்புகலப். (பிழை)

சரணங்கள்.

பொய்யோமெய்யோ யெதுபுகழினுஞ் சிவகதை
உய்யலாமெனவே யுரைப்பா ருலகிலிதை. (பிழை)
பித்தனுரையெனினும் பிரியப்படுவார்கண்டு
குற்றமதனைத்தள்ளிக் குணத்தைக்ரகித்துக்கொண்டு (பிழை)
சிறியதேற்றும் விதையுஞ்சேற்றை யகற்றியுண்ணும்
மறுவில்நீறுதவும் வண்ணம்போ விதில்நண்ணும். (பிழை)

புராண வரலாறு.

விருத்தம்.

பண்டுவெள்ளியங்கிரியிற் சூதர்சம்பு
பக்தராதியர்கேட்கப் பகர்வர்முன்னம்
வண்டுவரிவிழியுமையா ளரனைநோக்கி
மண்டலத்தில்நல்லறமு மெய்யுமேன்மை
கொண்டுயர்ந்தஸ்தலங்களுமெங் குளதுவென்று
கூறமகாதேவரன்பா யுரைத்தவாறே
விண்டுரைப்போமகிழ்வினொடு கேளுமென்று
மெய்யகிரிஸ்தலமகிமை விளம்புவாறே. (௬)

ராகம் ஸ்ரீ-தாளம் ஆதி.

பல்லவி.

தவ முனிவோரே-சாற்றக்கேட்பீரே

அநுபல்லவி.

பவமொழிந்திடுமார்க்கம்-பார்த்தீரிதுவேதீர்க்கம். (தவ)

சரணங்கள்.

இக்கலியுகத்தினி லெவருக்கு மிகத்தினில்
முக்கண்ணர்பக்தி தானே-முதிர்ந்தால்முக்தி சொன்னேனே (தவ)
அவ்வயைனும் அரியும் ருத்ரனுமே
யிவ்வண்டங்கள் படைப்பரே ரக்ஷித்துத் துடைப்பர். (தவ)
வானமுமறைய மகேசன் செய்துறையத்
தானனுக்கிரகிப் போனே ஸதாசிவனெனுங் கோனே. (தவ)

விருத்தம்.

அனுக்ரகஸ்வரூபசை தன்யஸாக்ஷி
யானஸதாசிவநித்யத் தனித்யமாயை.
பனித்துளியி லொருபனைகாட்டுவதொப்பாயப்
பாரெலாந்தன்பாற்சொப் பனம்போற்காட்டத்
தனித்தசதா சிவனொருசூ ரியனேருற்ற
தடங்கள்தொறுங் காணுதல்போ லவரவர்க்கும்
இனித்ததையீந் தருள்தெய்வம் பலவாய்த்தோன்றி
யிலங்குமாலயங்களதையியம்புவேனே.

பதம் ராகம்—கல்யாணி தாளம் ஆதி.

பல்லவி.

தேவாலைய மிதுகேளும் முனிவரே

அநுபல்லவி

காவேரி நதிக்கு வடபால் உயர்
கைலாஸம் வரையி லடவாய்ப் பின்பு
கன்றிடுவோ மறிந்திடவாய்த் தருள்
கனகைநதிக்குத் தென்கரைமுதலா மடவாய் (தேவா)

சரணங்கள்.

இருபத்து மூவாயிரஞ் சிவக்ஷேத்ரம்
அரியுற்ற ஸ்தலங்களாயிரமே ஆறு
யிரங்குக க்ஷேத்ரமே அய்யா
யிரங்கணபதி ஸ்திரமே
நூறும்நடேச ராலயமுள்ள புரமே (தேவா)

வெற்றிமிகு பதினோராயிரம் அரி அர
புத்ராலையங்கள் நிலைமேல் ஸ்துதி
போற்றும்பத்ரகாளி ஸ்தலமே தொகை
புகலுமூவாயிரம் பிலமே விய
பூதங்களின்ஸ்தலம் நூறுமே யின்னிலமேல் (தேவா)

விரித்துரைப்போந்திரு விடைமருதூ ரய்யா
றுரைத்த கும்பகோண நகரம் மா
யூரம் ஸ்ரீ வாஞ்சியம்பகர நல
முளவெண்காடுயர் சிகர வர
னுலவுமிவ்வாறுங் காசிஸ்தலநிகராம் (தேவா)

அக்ஞான விஞசிநதி தீரத்தி
லைஞ்ஞூறுந்திவ்ய தேசம் அதில்
ஆபதோத்தாரண யீசர்-பதி
ஆனந்தீச்வரங் கைலாஸ நிகராம்
ஸ்கந்தபுரிமுதலா மதிப்ரகாச (தேவா)

சுவேதநதிதீரத்திற் றுலங்குகோ கர்ன்னம் நாக
நாதேச்வரஞ்சிகா கிரியே சாந்த
ஞுதம்அரதீர்த்த நகரியே ஆத்ம
நாதமுத்தலனந்தம் புரியே-சூழ
நடுநாயகமாய் விளங்கும்ஸத்ய சிகரியே (தேவா)

மணிமுக்தாநதி மதுநதிதீரத்திற்
பணியுற்றிடு முயர்புதுவை மறை
பயில்மயின்மலை யுகந்த துவே புகழ்
பதியாடானை யென்பதுவே மிகப்
பகர்புனல்வாசலிப் பதிகளுயர்ந் ததுவே (தேவா)

மருவுதாம்பரவர்ன்னி வைகைதீரமதிற்
றிருநெல்வேலி குற்றாலந் திருச்
செந்தூர் பரங்கிரிஞாலம் புகழ்
திருவாலவாயுயர் சிலம் உள்ள
திருப்பூவணமிவைகள் சிறந்ததுவாமே மேலாம் (தேவா)

ஸ்தல விசேஷம்.

விருத்தம்.

வகுத்தஸ்தலங்களில்சுவேத நதிதீரத்தில்
வளர்ஸத்யக்ஷேத்ரமூர் வரைமாமூர்த்தி
தொகுத்ததிருநாமமொன் றாகிமெய்யாய்த்
துலங்கிமேலாகுமதில் மெய்மாலன்பின்

உகுத்தலராலர்ச்சிக்குஞ் சிவதாஸன்பொய்
யுரையாதவரிச்சந்த்ரன் சந்த்ரன்அன்பு
மிகுத்தஸதாசிவன்றன்னைப் பூஜித்தன்று
விளங்கினரஸ்தலமகிமை விளம்புவேனே.

பதம்-ராகம் செஞ்சுருட்டி-தாளம் சாப்பு.

பல்லவி.

ஸ்தலவிசேஷமிதே நல மாகியதே

அநுபல்லவி.

பலமிகவே அருளுமுயர்வாம்
பதிகளிலதிகமாங் கதியுதவும். (ஸ்தல)

சரணங்கள்.

புதுமையாகியதே புவிபுகழுவதே
யிதுநிகராய் யெதுவுளதோதும்
யீசனேமா நேசமதாய் வாஸமிதான. (ஸ்தல)

பலவினையகலும் பழமறைபுகலுந்
தவமிதாமேஸா லோகமுடன்
ஸாமீப ஸாரூப ஸாயுஜ்யமுமே யீயும் (ஸ்தல)

மாதவன் பண்டுவந் திதுகண்டு
நீதமதாய் நித்தியமும் அரனை
நேசித்து ப்ரகாசித்துப் பூஜித்து உலாவும். (ஸ்தல)

தீர்த்த விசேஷம்.

விருத்தம்.

தலவிசேஷத்தைக்கேட்டுத் தவமுனிவோர்களெல்லாம்
நலவியப்புடன்றுதித்து நவின்றிடுதீர்த்தமேன்மை
குலவியதுரைப்பீரென்று கூறவுட் குளிர்ந்துநோக்கி
உலவியதறைவர்ஸூத ருயர்முனிவரர்க்குத்தானே.

பதம்-ராகம்-இந்துஸ்தானி பியாக்கு-தாளம்-ஆதி.

பல்லவி.

தீர்த்தமிதற்கெதிரேது யிந்த ஜகத்திலெங்கு மிதற்குஸமத்வமிராது (தீர்த்த)

அநுபல்லவி.

ஏற்றுவாகன ரருளாலே வந்ததுயிது
யெந்தத்தீர்த்தங்களும் யிதிலாடி உயர்ந்தது. (தீர்த்த)

சரணங்கள்.

யெவருமொருதின மிதில் வந்து ஆடினால்
இறந்துபிறந் துழலாரே

யிதமடைவாரே பெருவும்நேரே
யிகத்திலும்ஸுகம்பெற்று யின்பம்வீடடைவாரே. (தீர்த்த)

திலதர்ப்பணுதி சிராத்
தாதியோர் தினஞ்செய்தால்
திர்ப்தியாகிப் பிதிர்தேவர்
திகழ்ஸ்வர்க் கஞ்சேர்வர்
தேவரேயாவர் ஜீவனென்பதொழிந்து சிவஸ்வரூபமாவர். (தீர்த்த)

ஸத்யதேவதைக்காய்ச் சந்த்ரசேகரர்தம்
ஜடையிலணிந்த கங்கை நீரே
தான்வந்து நேரே
சார்ந்ததிவ் வூரே
தழைக்கவுற்றதாலிது ஜடாதீர்த்த மென்றுபேரே. (தீர்த்த)

மூர்த்தி விசேஷம்.

விருத்தம்.

தீர்த்தமா மகிமைசொல்லத் திக்திக்குங் கேட்கக்கேட்க
ஆர்த்தனுர் புகழன்பாக வறையுமும் மகிர்தவாக்கே
தார்த்தமாம் மூர்த்தி மேன்மை சாற்றுமென் றறவோரெல்லாம்
போற்றவே ஸூதரன்று போதிப்ப ரோதித்தானே.

பதம்-ராகம் ஆரபி-தாளம் ஆதி.

பல்லவி.

மூர்த்திமகிமைநீரே-கேட்பீரே மூர்த்திமகிமைநீரே.

அநுபல்லவி.

நாற்றிசைகளிலுமி தகிசயமென விள்ளும்
நாடியமரர்கள்கொண் டாடிவரங்கள் கொள்ளும். (மூர்த்தி)

சரணங்கள்.

ஆதிசேஷன் நூறுண்டுமே சொல்லினுமுடி
யாதுஅப்பாலு முண்டுமே
லோதியென்குருவெனக் கருளியபடிசில உண்டானதிங்
கோதுவங் கேளுமின்று நல்ல (மூர்த்தி)

கண்டோர்பவந்தீரும் பணிவோர்பலன்
கண்டுசொல்லார் யாரும்
அண்டர்க்குஞ்சதுர்வேத மதற்குமேதெரியாது
அன்பாயரன்றுனறிந்தேயுகந்தோது. (மூர்த்தி)

ஸத்யம்மால்சிவதாஸன் அரிச்சந்திரன்
சந்திரன் இவர்கள்நேசம்
வைத்துப்பூஜித்தார் ஸத்யமானதிம்மலை தானே
மண்பாரிதன்பாய் மகிழ்ந்தேதினந்தேடி. (மூர்த்தி)

ஆகவிருத்தம் கக-வெண்பா உ-கீர்த்தனை கஉ.

முதலாவது

சத்திய தேவதை வரம்பெற்ற அத்தியாயம்.

விருத்தம்.

அந்தமுள்ளமூர்த்திவிசே ஷத்தைக்கேட்டு
அறவர்புகழ்ந்தாதியோ டந்தமாக
இந்தவரன்புதுமையெல்லாஞ் சொல்வீரென்ன
வேகேளும்ஸத்யதே வதையைமுன்பு
பந்தமுறும் அஸத்யதே வதையிசழ்ந்து
பலவசுர ராற்றுன்பப் படுத்தநொந்து
வந்தரனார்கைலாஸ கிரியிற்சென்று
வணங்கிமுறையிட்டழுது வழுத்திற்றன்றே.

பதம்-ராகம்-தனசரி-தாளம்-ஆதி.

பல்லவி.

அரகோகைலாஸா அரஜகதீசா-அரகோகைலாஸா.

அநுபல்லவி.

ஸுரகெணஸேவித ஸுந்தரசோபித. (அரகோ)

சரணங்கள்.

சசிதரசூல தாரணசீல பசுபதேகால பயா அனுகூல (அரகோ)
ஸர்ப்பாபரண ஸரோருகசரண அற்புதகிரண அரமிர்கதரண (அர)
வரதப்ரஸாதா மங்களகீதா பரமவினோதா பார்வதிநாதா. (அரகோ)

விருத்தம்.

அத்தியஞ்செய் திடப்பாண்டிய தேசந்தன்னிற்
சுவேதநதி யதற்கரையோ ரணைதென்திக்கில்
முத்தியநான் மறைவேணு வனமாயோங்கும்
முனிவர்தவம் புரிவரதில் நீயுஞ்சென்று
வெற்றிபெறத் தவஞ்செய்வை யென்றுவிண்ணில்
விளம்பக்கேட் டுயர்கைலா ஸத்தைநீங்கிச்
சத்தியதே வதைவேணு வனத்தில்வந்து
தவ முனிவ ரொடுசெய்யுந் தவசுதானே.

ஸபாயி-ராகம்-பியாக்கு-தாளம் சாப்பு.

ஸத்யதேவதைவேணு வனத்தினிற்
ரூபதரோடுற வாகியுற்றே
சைவரூபமாகியே காச்ரசித்தமாய்த்
தவஞ்செய்ததீசுவ ரனைமதித்தே. (க)

பக்தியதாய்த்தவ மேசெய்யுந்தாபத்தைப்
பார்த்துக்கிருபா வீக்ஷணம்புரிந்து
பார்வதியோடீசு வரனெழுந்தேவிர்ஷ
பாரூடராகவந் தார்பரிந்து. (உ)

வந்தந்தவெற்பினில் யீசுவரனும்வேணு
வனத்தினில்அம் பிகையுமுகந்தே
மகிழ்ந்திடத்தேவர் முனிவருடன்ஸத்ய
மகாதேவதையு மிகப்புகழ்ந்தே. (௩)

ஸந்ததஸத்யகிரீ சுவரவேணுவ
னேசுவரிதரிச னந்தந்தீரே
தன்யாளானேனென ஸ்துதித்தாளென்றுந்
தானேநிலைத்தந் தப்பேரே. (ச)

அன்றேயசுரர் அழிந்து அஸத்யமும்
அஞ்சியதீசுவரன் அன்பாலே
ஆனைமுகனுதியோரும் வந்தாலங்கோ
ராலயமாச்சிது பார்மேலே. (ரு)

யென்றுமிங்கேயிருந் தென்னைரெக்ஷிப் பீரென்
றேஸத்பதேவதை தான்வேண்ட
ஈசுவரன் அம்பிகையோ டிருந்திவ்வுல
கின்பமடைந்திடவே யாண்டார். (ரு)

விருத்தம்.

அரனருளால் மெய்மலையாய்ப் பொய்யனுப்போ
லானதுயிம் மலைதோன்று மளவுகாலன்
றரணியிதி லனுகான்பொய் யுரையார்யாருந்
தருமமுறைமோங் குந்தவமுந் தழைக்குமென்றே
பரனருளச் சத்தியதே வதைக்காயாங்கு
பகராலே யக்கீழ்பாற் பரமன்வேணி
வரநதி ஜடாதீர்த்த மென்றுபேராய்
வந்துலகிலெவர்க்குமுக்தி வழங்கிற்றன்றே.

ஸத்தியதேவதை வரம்பெற்ற அத்தியாயம் முற்றிற்று.

ஆக விருத்தம் ங கீர்த்தனை உ.

இரண்டாவது

மாயவன் இடப்பெற்ற அத்தியாயம்.

விருத்தம்.

ஸத்தியதேவன்தபிவ்வா றோங்கப்பின்னாள்
தனிற்காலநேமிதனை வதைத்துஅந்த
அத்தியதுதொடரவுயர் ஸத்யவெற்பி
லடைந்தாலதொழியுமென வறிந்துமாயன்
முக்திதருஜடாதீர்த்தத் தாடஅத்தி
முன்னில்லாதோடப்பண் டாழியீய்ந்த
வெற்றிதருஸத்யகிரீசு வரரைப்போற்றி
வீழ்ந்தெழுந்து தாழ்ந்துநின்று வேண்டினரே.

பதம்-ராகம் சகனா-தாளம் சாப்பு.

பல்லவி.

சம்போசிவசங்கர சந்திரஜடாதர ஸத்யகிரீசுவர-அரா-ஜடாதர
ஸத்யகிரீசுவர-அரா

அநுபல்லவி.

கும்போத்பவபூஜித கோகனகபத
கோமளமதுரமிர்து வசனஸார
காமதகன கைலாச அர அர. (சம்போ)

சரணங்கள்

அகணிதகுணகன வாசாமகோசர
அதுலபாலநேத்ரா மஞ்சுளகாத்ரா
அகிலநிகில ஸ்தோத்ரா
ஸகலஜகன்மயகாரண அர ஸாகுர்தவரகுகவாரணானன
ஸனகமுனிகண இர்தயசரமிர்க
வரபரசுதர பரமஅரஅர. (சம்போ)
காலகாலஸ்ரீகண்டா னந்தாகார
த்ருபுர அரா கங்காதர
கல்யாண சைலவரா
சூலதாரணசங்கராஅரா ஆலகாலபயங்கராபர
சீலமுனிஸாத பாலனகர
கபாலஹிதஅனு கூலஅரஅர. (சம்போ)
தபனோதாசன சசிநயனார்த்த சரீரநாரிநாதா
நிர்த்தனபாதா ஸரஸஸாமகீதா
அபயவரதஸாகரதலாதர
சுபகரவிஜய ஸாரசிலாதர
விபவஸாதஹித விர்ஷபகமன
விகிதவிபுதகண ஸ்மரண அரஅர. (சம்போ)

விருத்தம்.

துத்தியஞ்செய்யத் தோன்றியுமையொடு
சத்தியமாமலை ஸ்தாணுவெதிர்வர
அத்திதீர்ந்து அருள்பெற்றமாயவர்
பத்தியாகப் பணிந்துபகர்வரே.

கண்ணிகள்.

ராகம் இந்துஸ்தானி பியாக்கு-தாளம் ரூபகசாப்பு.

ஸ்தாணுஸத்யகிரீசுவரா ஸர்வஜகன்னாதா அர

வேணுவனேச்வரிநாயக விமலாம்புஜபாதா. (க)

வரதாபர்ம்மஅத்திமோசன மந்திரரகமரூபா-வர
சரணுஸ்ரீதஜனரெக்ஷ ஜடாதீர்த்தப்ரதாபா. (உ)

தினமும்ஸேவைசெய்தேபதஞ் சேவித்திங்குமே—வ
தனதாயிந்தஸ்தலபாலனந் தான்செய்தே உலாவ. (ங)

தேவரீர்ஸ்தலயோகபோகங்கள் தினம்யானும் பெற்றிடவே-மிக
ஆவலாகவேஆறிலொன்றுதந் தருள்செய்வீரென் றிடவே. (ச)

ஈசர்ஸத்யகிரியிற் றமதிருப்பின்பூர்வபாகம்-மிக
நேசமுடன் ஆறிலொன்று நிரந்தியந்தனர்போகம். (ரு)

வாய்த்ததென்றே கொண்டுதிரு மால்மாபலிதன்னையன்று
ஏய்த்ததென்னச் சமபாகமா பெல்லாங் கொண்டார்பின்னே. (சு)

விருத்தம்.

அருட்பெருகு ஸத்யகிரீ சரைப்பிர்கத்து
சாம்பாளாம் வேணுவனே ச்வரியைப்போற்றி
விருப்புறுமா தவனிச்சைப் படியேபிந்த
மெய்யமலை தனிற்றமக்குக் கீழ்பாலாக
இருப்பிடமு முபர்வான யோகபோக
மெதுவுமர னருளின்னன் றுதியாகத்
திருத்தழையு மணிமார்ப ருகந்துநாளும்
ஜகபரிபா லனஞ்செய்து சிறப்புற்றாரே
மாயவன் இடம்பெற்ற அத்தியாயம் முற்றிற்று.
ஆக விருத்தம் உ கீர்த்தனை உ.

மூன்றாவது

சிவதாஸர் முத்திபெற்ற அத்தியாயம்.

விருத்தம்.

காலநேமியைவதைத்த கனபழியொழித்தமேனாள்
மாலவன்ஸத்யவெற்பில் வந்தவாறுரைத்தபின்னாள்
மேலவர்சிவதாஸப்பேர் விப்ரேந்திரர்சரித்ரந்தன்னைச்
சீலமாதவர்க்குச்சூதர் தெரிந்திடச்சொல்லுவாரே.

ராகம் தனுசரி-லாவணி-தாளம் ஆதி-கண்ணிகள்.

விரூபாட்சிநகரம் அதிலொரு விப்ரர்-அவர்பேர் சிவதாஸர்
சுருதிஸ்மிரதி புராணங்களில் வெகுதீரர்-ஸுதர்ம்மஸுகவாஸர். (க)
கௌண்டல்ய கோத்ரோத்பவர் யெஜுஸ்வவேதர்-ஷட்கர்ம்மாக்னி [ஒத்ரர்
சிவசரிதாமிர்தபானர் சிவபதத்தியானர்-சிவஸ்மரணஸெதாத்திரர்.
பவபாவ வினசர் பரமப்ரகாசர்-பரத்ரவ்ய ரகிதர்
அவர் தினஞ் சிவபூஜை சிவதெரிசனம்-அரபக்தர்மேலாசை. (உ)
அஜகரஞாயம தாகத்தினமேக வாரம்-அசனமுபாதானம்
அஜநிப ராமவர்தாமே அவருடதேவி அருந்ததி ஸமானி. (ச)

விருத்தம்.

அருமறையோ னிந்தவண்ண மிருக்கவென்று
மவர்பாரி பதிவிர்தா சீலமேலாம்
பெருமையுள்ளாள் ஸவுந்தர்ய நயகுணத்தாள்
பிள்ளையில்லாத் துயராலுந் தரித்ரத்தாலும்
அரிமைவேண் டித்தினமுந் தனதுபர்த்தா
அறியாம லந்தரங்க மாய்ப்பூஜித்து
ஒருதுறையு மெண்ணாத்தன் பதியைநோக்கி
புளகமெலிந்து நமஸ்கரித்து உரைக்கின்றாளே.

பதம் ராகம்-பூரிகல்யாணி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

தனத்தைத் தேடவேணுந் தேடுந்தனமே-தவங்காணும்

அநுபல்லவி.

கனத்தையும் தரும் இனத்தைபுந் தருங்
கல்வியுஞ் செல்வமும் யெல்லாந் தரும்பெருந் (தனத்தை)

சரணங்கள்.

எல்லாம்அஸத்பம் ஸத்யஞ்சிவன் யென்னவேகண்டீர்-ஒன்றும்
யில்லாமாயையின் கற்பிதம் உலகேயெனக் கொண்டீர்
நில்லா வுலகெனும் பொய்யினிற் பொய்யே
நிறையும் அல்லாதுண்டோ சொல்லுவீர் மெய்யே

யில்லா ஆகாசந் தனிலே-யேற
யேணிவைத் தலைகிறீரே-தேறத் (தனத்தை)

ஊணுறக்கமற்றே விச்சுவிச்சென் றேயாமுணுமுணுப்பே-செய்து
ஒருவரோடும் பேசா மவுனங்கொண்டீர் யிது வக்கணிப்பே
காணு மெவர்நம் வறுமை யொழித்தார்
காணுவிடங்களிலே சொல்லிப் பழித்தார்

நாணத்தைவிட்டின் றும்மையிது கேட்டேன்
நானினிமேலிந்தக் கஷ்டப்பட மாட்டேன். (தனத்தை)

தினமுலர்த்தியுடுத்துவதொற்றைத்திரிக்குமாகாக்கந்தை—யெந்தன்
றிருமங்கல்யமும் அரக்கேபார்ப்போர் செய்கிறீரே-நிந்தை
கனுவன்றைக் கறிவேன் மஞ்சள் விரளி
கண்ணும் போச்சென்ணேயு மேதீ பாவளி

கனவேகாண்பேன் உண்பதுபோலே
கண்டவிருந்துக் கொளிதடேனே மேலே (தனத்தை)

செய்யும்பூஜையாற் பொய்புலகிதிற் சிவனென்றுந்தாராரே-யென்றுந்
திருமாலேப்பூஜித் தாலிகந்தெவிட்ட அருள்வர்நேரே-யிது
பொய்யென் றுலோர் மனிதரை யடுத்தாற்
பொருள்சேருமிது ரெண்டையும் விடுத்தால்

அய்யனேநீரின்று களவுக்கேகியும்
அடியாள்விபசாரி யென்று போகியும் (தனத்தை) (ச)

விருத்தம்.

கோடைமழை பெய்துமின்னி யிடித்தாலென்னக்
கோதைகுறை சொலி முடிக்க மறையோனுக்கு
ஓடைநீர்த் தூண்டிக்குட் பட்டமீன்போல்
உணர்வொழிந்து மூர்ச்சையுற்றார் பின்றெளிந்து
பேடைமின்னுள் தனைப்பார்த்து விழிசிவந்து
பெருமூச்சு விட்டுப்பற் கடித்துயின்ப
வீடையருள் சிவபூசை தனையிகழ்ந்தாய்
வேண்டாய்நீ யெனக்கென்று விளம்புவாரே.

பதம்-ஸ்ரீராகம்-சாப்பு-தாளம்.

பல்லவி.

மூடமே போடிநீ யென்னோடு வாயாடாதே

அநுபல்லவி.

ஓடிநிதிதேடுவாரைக் கூடென்னோடாதே (மூடமே)

சரணங்கள்.

செல்வமேநீர்க்குமிழி புல்லினீர்தேகம்
தொல்லுலகிற் றேகமிதைக் கொல்லுவது மோகம் (மூடமே)
அல்லவோ மோகமது யில்லமெனும் லோகம்
யில்லமேல் மாதரெமன் யில்லையே ஸந்தேகம் (மூடமே)
ஆயிது அன்யாய வுலகேயென் னவும்நாடே
மாயையின் அபாயவினை தீயநிந்தவீடே (மூடமே)
ஓயும்நல் லுபாயவழி யேபறியா மாடே
போயழுந்து வாயேநர கேயிதெல்லாங் கேடே (மூடமே)
நித்யமி தனித்யமி தென்றுற்றறி யாய்வாடி
ஸத்தியம் அஸத்தியத்தை யெற்றுமடி நாடி (மூடமே)
மித்தையால் மிகுத்தபொருள் நித்யமுமே தேடி
வைத்தது போங்காலம்வந்தாற் சற்றுநிற்கு மோடி (மூடமே)

விருத்தம்.

மானிலங் கயில்வேற்கண்ணாள் வதனம்நோக் காமற்கூற
நானிலங் களில்மெய்யில்லை நலமருளுவது பொய்யே
வேனிலங் கசனையீன்ற விஷ்ணுவைப் பூசைசெய்தால்த்
தானிலங் கதிக்குமென்றாள் தனைச்சினந் தறைகுவாரே.

கண்ணிகள்.

ராகம்-சாவேரி-தாளம்-ரூபகம்.

போடிபோடி பொருள்தேடி நாடியே
யிப்போதுன் னிச்சைப்படி செல்லடி-வா
யாடவந்த உன்முகத்தை நாடேனினி
அப்பாலே ஒதுங்கி நில்லடி. (க)

ஒதுங்குவேனோ தேவரீரை விட்டுவிட்டு
உயிருள்ள மட்டும்கெஞ்சிக் கெஞ்சியே-நான்
பதுங்கியே உலகத்தாரோ டொத்துவாழப்
பார்த்துச் சொன்னேனஞ்சி அஞ்சியே. (உ)

அஞ்சியோயெனைநீ யெவ்வளவும் மதித்திடா
தவமதிக்கச் சிந்தித்தாய்-அடி
வஞ்சகி இகபரந் தந்தாளுஞ்சிவ
வரதன்பூசையை யேன் நிந்தித்தாய். (௩)

நிந்தையோநீ ரிதுவரையில் பூசைசெய்து
நிலத்திலோர் பலனு மறியீர்-வை
குந்தமாலைப் பூசித்திட்டால்ச் செல்வமிகக்
கொடுப்ப ரென்பதுவுங் குறியீர். (௪)

குறித்தசைவரினும் வைஷ்ணவர்கள் செல்வங்
கொண்டதென் சொல்லடி நீயே-யெல்லாம்
வெறுத்துநானிஷ் காமபூசை செய்ததல்லால்
வேண்டினேனோ நிதியே. (௫)

வேண்ட விலையெனில் ஆண்டவனேயென்ன
வேலைசெய்தும் பெருந் தனமே-தேடிப்
பூண்டுடுத்து உண்டுயெவர்க்கு மீய்ந்துயிக
போகமே சுகித்தல் கனமே (௬)

கனமொழிந்திடு பொய்களவு யேவல்த்தொழில்
களைச்செய்தா விகழ்ந்து நாடி-நம
தினமெலாம்பழித்துச் சாதியிற் சேராரே
யென்னசெய்வாய் பொருள் தேடி. (௭)

தேடிஅன்ய தேசத்தில் நம்மினத்தில்ச்
சேர்ந்தி டாமலிரு வோரும்-அங்கே
கூடிவாழ்ந் திருக்கலாமே நம்மைமிகக்
கொண்டாடி அணைப்பார் யாரும். (௮)

அணைக்குஞ் சாதிவிட்டு அன்யரைத்தழுவி
அசல்நகைக்கும் வாழ்வு சதமோ-நம்மை
இணக்கமாகச்சேரு மவற்கும் நமக்கும்தாழ்
வில்லையோ இதுஸம் மதமோ. (௯)

தாழ்வுபொய்கள விகட்சிபெல் லாம்பெருந்
தனமுண்டானுல்க் கிடை யாதே-அந்த
வாழ்வுதான்பெரிது யெந்தத் தீரும்திரு
மால்பொறுத் தாள்வரப் போதே. (க0)

மாலைப்பூசித்துப் பொய்களவு செய்துயெவர்
வாழ்ந்திட்டா ரதனைச் சொல்லடி-அடி
மேலைநாளிற்சிவ பூசைசெய்து மாலும்
மேன்மை பெற்றார்வே றல்லடி. (கக)

அல்லவேசிவனைப் பூசித்தார் அரியென்
றறையக் கேட்ட தில்லை ஐயோ-இது
சொல்லலாமோபொய் யுரைப்ப தில்லையென்று
சொன்னீரே யிதென்ன மெய்யோ. (கஉ)

மெய்யனேசிவ னென்றால்முன் னாளிலந்த
விஷ்ணுவே சிவனைப்பூசை-யென்றும்
செய்யும்அஸ் தலத்தைக் காட்டிநானசனஞ்
செய்கு வேனடி பிசாசே. (கங)

அசனம்நீரருந்து மட்டும்நானும் அன்னம்
அருந்திடேன் இரவுந் தூங்கேன்-இங்கு
நிசமிதென்றுகண்டா லொழியத் தேவரீரை
நிழல்போலே தொடர்ந்து நீங்கேன். (கச)

விருத்தம்.

நீங்கேனென்ற பாரிமொழி நெஞ்சத்தெண்ணு தேவெறுத்துப்
பாங்கேயறியா யுனைச்சேர்ந்து பாபச்சுமையை யினிச்சுமக்கத்
தாங்கேன்திருமால் பூசித்த தலங்கண்டொழிப்பே னுன்னுறவு
தீங்கேயென்று மனைவிட்டுச் சென்றார்தேடு கின்றாரே.

பதம்-ராகம்-பிலகிரி. தாளம்-சாப்பு.

பல்லவி.

சிவதாஸர்நேரே தேடிச்சென்றாரே.

அநுபல்லவி.

தவமாமெய்பூஜித்த ஸ்தலத்தைக் காணவுற்ற (சிவ)

சரணங்கள்.

அன்னமுண்ணுமல் அகத்தையெண்ணுமல்
பின்னேமனைவிவாப் பேசிநண்ணுமல் (சிவ)

ஸத்யத்தைநாட்டத் தரித்ரத்தையோட்டப்
பக்தர்க்கெல்லாஞ்சிவனே பரமென்றுகாட்ட (சிவ)

தண்ணதியாடி ஸ்தலமெங்குமோடி
யெண்ணம்நிறைவேற்று வேனேவென்றுநாடி (சிவ)

மலைநதிதீரம் வளைகடலோரம்
நிலைநகரெங்குஞ்சுற்றி யேநெடுந்தூரம் (சிவ)

பன்னருங்கேலி பழையனூர்நீலி
யென்னத்தொடரும்பாரிக் கேயஞ்சிக்கோலி (சிவ)

மெய்ச்சிவன்னின்று வெளியாகாதின்று
வச்சுயிர்வாழேனிந்த மனைவிமுன்னேயென்று (சிவ)

அலைந்தெங்கும் வளைத்து ஆகமுமிளைத்துக்
கலங்கியெங்கெங்குமே காணுமற்களைத்து (சிவ)

விருத்தம்.

தேடியேஸ்தலங்களெங்கும் மெய்யாலோங்கிச்
சிறந்ததாய்க்காணுமற் றியங்கிச்சிந்தை
வாடியேபசியாற்கா தடைத்துமேனி
வதங்கிக்காலோய்ந்துநடை வருத்தமுற்று
நாடியேசுவேதநதித் தென்தீரத்தில்
நறுமலர்சேர்புன்னைமர நிழலில்வீழ்ந்தார்
கூடியேவருமனையாள் பார்த்துநெஞ்சங்
குறைவுற்றுமெலிந்திதனைக் கூறுவாளே.

ராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ரூபகசாப்பு.

பல்லவி.

ஏனிதுவாதா யென்பிராண நாதா

அநுபல்லவி.

நானிலமெங்கும்நீரே நாடியுங்காணீரே (ஏனிது)

சரணங்கள்.

திருவடிநோகத் திரங்கியேதேகம்
உருகியேவேக வுளம்மெலிவாக (ஏனிது)
என்னுரைநீரே யினிமேற்கேட்பீரே
பொன்னுலகோரே புகழவாழ்வீரே (ஏனிது)
சிவனருள்பாரார் செல்வமேதாரார்
தவமதுபொய்யே அஸத்யமேமெய்யே (ஏனிது)
அரிநாமங்கூறும் அகமதுதேறும்
பெருமையேமீறும் பெருஞ்செல்வமூறும் (ஏனிது)

விருத்தம்.

சாற்றினள்வெந்தபுண்ணிற் றணலுறும்நாராசத்தை
யேற்றினதெலன்னகேட்டு இருந்தஜீவனும்போய்க்கண்ணுந்
தோற்றிடாச்செவியுங்கேளாச் சோபமுற்றேகிடந்து
ஏற்றினாருளாற்பின்பு எழுந்துநொந்தேங்குவாரே.

பதம்-ராகம்-உசானி-தாளம்-ஆதி.

பல்லவி.

என்னசெய்வேன் அப்பனே சோதனையுமக்
கேற்குமோயிது மெய்யனே.

அநுபல்லவி.

சொன்னதெல்லாஞ்சிவ த்ரோகியிவட்குப்பொய்யா
யின்னமுமெனதுயிர் ஏனேயிருப்பதய்யா (என்ன)

சரணங்கள்

சிவனேயுமது நேசம் பொய்யாமது
தீதென்றுரைத்தாள் மோசம்
இவள்மனம்போற்செய்தா லிருக்குமோயென தாவி
குவலயந்தனிலிவள் கூற்றுனகொடும் பாவி (என்ன)
மலையன்றெழு மீசனே உலகமெங்கும்
மருவியகை லாஸனே
யிலகுமுமதருளை யிவள்செய்தாள்பரி யாஸம்
நிலவரமாகுமோ நீங்குமோயென் னேசம் (என்ன)

.... ஆவணக்காப்பக ...
சென்னை-600 008.
149042
Q23:4•7 M29

மெய்மயமான ஆதியே சராசரம்
விளங்கநிறைந்த ஜோதியே
யெம்மதத்தோர்க்குந்தெய்வம் ஏகமல்லாதி ரண்டோ
அம்மதத்தெய்வமும்மை யல்லாதுவேறு முண்டோ (என்ன)
ஸகலமுமான நித்யனே யெந்தவராமுந்
தந்துரெட்சிக்குங் கர்த்தனே
இகபரந்தரவும்மா வில்லைஅரியே யென்று
புகலுகின்றாளேயது போலாகுமோ யின்று (என்ன)
பக்தர்க்கருளும் அருளே மாலயன்றேடிப்
பண்டுகாணுத பொருளே
முத்தொழிலும்புரிந்து மும்மூர்த்தியு மாகி
நித்யரானஉம்மை நிந்தித்தாளே துரோகி (என்ன)
ஸத்யமென்பது இல்லையோ ஸச்சிதானந்தத்
தத்வப்பொருள்நீ ரல்லையோ
பக்தர்க்கருள்புரியும் பரமனேயென்ன கண்டோ
சித்தமிரங்காதுநான் செய்தகுறைக ளுண்டோ (என்ன)
உருக்கியெனது சிந்தையே நோகச்செய்தாளே
உமக்கன்றோ யிந்த நிந்தையே
அரிக்கருள்செய்தமெய்ய ரானமூர்த்திநீ ரெங்கே
யிருக்கினும்வெளிப்படா விட்டாலிறப்பே னிங்கே (என்ன)

விருத்தம்.

மறையவனிப்படியிரங்க ஆங்குநாக
மன்னன்விமலரைப்பூஜை செய்துஎன்றும்
உறையுமிடம்நாகநாத க்ஷேத்ரம்மென்
றுயர்ந்தபேர்பெற்றந்த உரகவேந்தாம்
இறைவனிதுகேட்டிந்தச் சிவதாஸர்பா
லெய்தியருமறையோனே யெந்தவூரிக்
குறையுமக்குவந்தகா ரணம்யா திந்தக்
கோதையாரிவையெல்லாங் கூறென்றானே.

கண்ணிகள்.

ராகம்-அமீர்க்கல்யாணி-தாளம்-திரிபுடை.

ஆரய்யாவேதியர் நீரிங்குவந்துதுக்கம்
அடைந்துவருந்தி நொந்தீர்-எங்கும்

அலைந்துஅலைந்து நைந்தீர்-யிந்த
அரிவையுடனே வந்தீர். (க)

நீரிந்தத்துயர்பட நெஞ்சமகிழ்ந்து நிற்கும்
நேரிழை யிவள்யாரு-உமக்கு
நிகழ்த்துவ தென்னபேரு-வந்த
நீங்களெந்த ஊரு. (உ)

வந்துகேட்பவர் யார்நேத்ரந் தெரிந்திடாமல்
மலைத்துநின்றேன் நானே-மெத்த
மனதுவாடி னேனே-சிந்தை
மயங்கியிப்போ தானே (ங)

இந்தமாதெனது மானமும் பிராணனு
மேகொண்டேயிப் போது-யேக
இமன்விடுத்த தூது-யென்
னேடுசெய்கிறுள் வாது (ச)

தூதென்றீருமது சொந்தமாது போலே
தோன்றுகின்றுளருந் ததியே-போற்
றெழுதுசெய்கிறுளே ஸ்துதியே-நல்ல
ஸுகுர்த பாக்ய வதியே. (ரு)

பேதம்வந்ததென்ன நானுமும்மைப் போலே
பெருமைவேதியன்று னில்லும்-நன்றுய்ப்
பேசிமனத் துயரை வெல்லும்- யென்மேல்
பிரியமாய்நடந்தவகை சொல்லும். (சு)

சொல்லுவே னெனதுர்விரு பாட்சியிந்தத்
துஷ்டையெனதுபாரி மெய்யாஞ்-சிவ
ஸ்துதிகள் பூஜையெல்லாம் பொய்யாம்-என்று
தூஷித்துவருகிறு ளய்யா. (எ)

செல்வம்அருளுமெய்யாஞ் சிவனைக்கண் டிவளைச்
சேர்ந்தபாவமெல்லாந் தீர்க்க-யெங்குந்
தேடிக்காணேன் பார்க்கப்-பார்க்கச்
சேவைதந்தீர் காக்க. (அ)

4

அய்யாபண்டுஸத்யம் அஸத்யத்தை வென்றுமலை
யானது அரனரு ளாலே-அதி
லரனைப்பூஜை செய்து மாலே-யிந்த
அகிலங்காத்தார்புவி மேலே. (கூ)

மெய்யமலையதாம் ஸத்யகிரீ சுவரர்
வேணுவனேசுவரி பேரே-கண்ணை
விழித்துப்பாருந் தெற்கே-நேரே-முன்னே
விளங்குதமே தோசெல் வீரே. (கய)

விளங்கவுரைத்தீர் நீரே விமலரெனக் கண்டேன்
வழிதெரிந்ததய்யா நாட-அன்று
மெய்துதித்துமால் தேட-என்றும்
வெற்றிதந்தவிளை யாடல். (கக)

களங்கமில்லாதமெய் மலையாச்சா பொய்
கரணுமற்றுலைந்ததா-பாரில்-இவன்
கண்முன்னே நேரில்-நின்று
காட்டினீரே கிருபா வாரி. (கஉ)

விருத்தம்.

வாட்டமுடனே சிவதாஸர் பால்பூஜித்த வளம்பதியை
நாட்டமுறவே தேடிவந்து நைந்துமனது நொந்துரைக்கக்
கேட்டவுடனே நாகமன்னன் கிலேசமொழித்துக் கைநீட்டிக்
காட்டமெய்ய மலையதனைக் கண்டார்மகிட்சி கொண்டாரே.

பதம் ராகம்- சுருட்டி, தாளம்-ஆதி.

பல்லவி.

கண்டு மனமகிட்சி கொண்டு பெருமையுற்றுக்
கதித்தார் ஸ்துதித்தாரே நேரே-கண்டு

அநுபல்லவி.

அண்டர் முனிவர்புகழ்ந் திடமெய்யுயர் மலையே-யாகி
யரனர் கிருபையாலே நின்றநிலையை (கண்டு)

சரணங்கள்

தாகம் பசிகள் நீங்கத்-துன்பந்
தணிந்து யின்ப மோங்க

ஆகம்புளகமுற்று ஆனந்தக்கண் ணீர்வடித்து
ஆடிப்பாடிக்குதித் தோடிக்கொண் டாடினடித்து (கண்டு)
அடிக்கடி மண்ணில்வீழ்ந்து பணிந்து-பணிந்
தானந்தக் கட லாழ்ந்து
நொடிக்குட் சென்றுகிரிப் பிரதக்ஷண மாகச்சூழ்ந்து
நோக்கிநோக்கிமன தேக்கந்தீர்ந்து தாழ்ந்து. (கண்டு)
ஸன்னிதிக் கெதிரோடித் தரிசித்து
ஜடாதீர்த் தத்தையே நாடி
அன்னிலேயே யதில் அனுக்ஞைபெற்று ஆடி
ஐந்தெழுத்தை ஜபித்துச் சிந்தித்துக் கதிதேடி (கண்டு)
தன்யனேனென்று ஸேவித்து
ஸத்யகி ரீசர்முன் சென்று
சென்னி தாழ்த்தியிரு செங்கை முடிமேல் வைத்துத்
தேவிவேணுவ னேச்வரியையுந் தரிசித்து (கண்டு)

விருத்தம்.

கண்டுநமஸ் கரித்தெழுந்து நின்றுசென்னி மேலிரண்டு
கரங்கள் கூப்பிக்
கொண்டிருகண் ணீர்சொரிய மொழிகுழறி மனைவியிகழ்
குறையைத் தீர்த்துத்
தொண்டுகொண்ட கிர்பைவடிவே ஸ்துதிக்கடங்கா மறைமுடிவே
தரிய வாழ்வே
விண்டுமறை தேடரிய மெய்ப்பொருளே யெனஸ்துதிகள்
விளம்பு வாரே.

கண்ணிகள்.

ராகம் இந்துஸ்தானி காபி-தாளம்-திரிபுடை.

சரணஞ் சரணஞ்சிவ சம்போசங்கரஸத்ய சைலநாதா
அரிஅர ப்ர்ம்மேந்த்ர வந்திதா ஆதிமத் யாந்தரகிதா (க)
அப்ரமேய பவரோகவைத்யா அரஸத்ய ஸ்வரூபா
ஸுப்ரஸன்ன ஸத்யாதி பரஸ்வரஸுரமேஸவித பூபா (உ)
ஆதிமூர்த் தியாத்யாஹ்ரு ரூபஸர்வாதார ஜகத்பதே
போதயுக்தபக்தாப ராதக்ஷம பூசுரப்ரயநிதே (ங)

ஸத்ப்ஸகாய யிஷ்ட தாயகா தருண சந்த்ரசூடா
நித்யசாந்தஸர் வேசமனோகர நிஜவிர்ஷபாரூடா (ச)

காலகாலஓங் காரதேஜோலிங் காகாரஸ்வரூபா
ஆலபோஜனு காமாரேத்ருபு ராந்தக ப்ரதாபா (ரு)

ஏகானேகானந்த மூர்த்திஸஹரஹித முனிவர ஸ்தோத்ரா
நாகாபரணு பிரகத்குசாம்பிகை நாயகாத்ருநேத்ரா (சு)

விருத்தம்.

எனஸ்துதித்த சிவதாஸர்க் கெதிராய்லிங்கத்
தினில்விர்ஷப வாகனமேற் கௌரியோடு
கனத்தபய வரதமிர்க பரசுஅஸ்த
கங்காசந் திரஜடா தரராய்ப்பஞ்சா
னனத்தொடுபிர்த் தியக்ஷமாய்ச் சிவபக்தாக்ர
கண்யசிகா மணிசத்ய சித்தனேநீ
மனஸ்தாபம் விடுவிடிங்கே நமதுகிட்ட
வாவென்றார் ஸத்யகிரி வாஸர்தானே.

பதம். ராகப்-துவஜாந்தி. தாளம்-ஆதி.

பல்லவி.

வாவா சிவதாஸா ஸமீபமாய் வாவா

அநுபல்லவி.

ஆவலாய் நம்மைத்தேடி அலைந்தலைந்து நொந்தாயே
பாவையுடனேயிந்தப் பதியைக்கண்டு வந்தாயே (வாவா)

சரணங்கள்.

துக்கமினியுனக்கி ராது-நல்ல-ஸுகத்தையே தருவோமிப் போது
நிற்குமுன்மனைவி மீது நீ கோபஞ் செய்யலாகாது (வாவா)

கற்பானவளுனது மின்னாள்-மனக்-கவலையினால்நிந்தை சொன்னாள்
இப்போதுமுன்னுடன் வந்தாள் என்னையுங்கண்டு பணிந்தாள் (வா)

எனதம்சமாம்அரியைத் தானே-பூஜித்-திட்டாளந்த அரி நானே
மனமகிழ்ந்திந்த மங்கையே மருவியிருப்பா யிங்கையே (வாவா)

விருத்தம்.

ஸத்யகிரீ சுரரிவ்வா றனுக்ரகிக்கத்
தலைகவிழ்ந்து வெட்கியஞ்சித் தாழ்ந்துநின்றாள்
பக்தியுள்ள சிவதாஸர் பாரியந்தப்
பாவையைப்பார்த் தேமகா பதிவிர்தைநீ
ஒத்திருந்து வாழெனவே னுாவனத்து
உமைகூறச் சிவதாஸர் மனைவிதாழ்ந்து
புத்தியற்றேன் செய்பிழையை உமைப்போல்யாரு
பொருத்தாள்வா ரெனப்பணிந்து புகழ்கின்றாளே.

கண்ணிகள்

ராகம்-சங்கராபரணம், தாளம்.ரூபகசாப்பு.

ஸத்ய கிரிநாதா வேணு வனேசுவரியே மாதா
அத்தனே யம்பிகையே உமைப்போல் யாரினி யாள்பவரே. (க)
பொய்யைப் புகழ்ந்தேனே உமது பூஜையிகழ்ந் தேனே
அய்யனே அம்பிகையே உமைப்போல் யாரினி யாள்பவரே (உ)
பேதை மதியாலே யேதோ பிதற்றினேன் பேய்போலே
ஆதியே அம்பிகையே உமைப்போல் யாரினி யாள்பவரே. (ந)
எண்ணுமற் பேசினனே பேரின்பத்தை யேசினனே
அண்ணலே அம்பிகையே உமைப்போல் யாரினி யாள்பவரே. (ச)
வேண்டாளெனவாகி பர்த்தா வெறுத்தசிவத் ரோகி
ஆண்டவனே யன்னையே உமைப்போல் யாரினி யாள்பவரே. (ரு)
பரனே நிந்தனையே செய்த பாவியா மென்றனையே
அரனே யம்பிகையே உமைப்போல் யாரினி யாள்பவரே. (சு)
தப்புரை யேகூறிச்சதி செய்தபழி காரி
அப்பனே யென்னன்னையே உமைப்போல் யாரினி யாள்பவரே (எ)
என்பெரு மானேஅய்யா அரி யேத்திப்பணிந்த மெய்யா
அன்பனே யம்பிகையே உமைப்போல் யாரினி யாள்பவரே. (அ)

விருத்தம்.

ஸ்தோத்ரஞ்செய் தவளையணைத் துயர்முத்தாரத்
தோடுகண்டா பரணம்நல்கித் துணைவரோடு

எத்தியிவ்வூ ரிற்றானே யிருந்துவாமென்
றேயுமைகூ றச்சிவதா ஸரைத்தம்பாரி
போற்றிவலம் புரிந்துநமஸ் கரித்துநின்று
புன்மதியேன் செய்தபிழை பொறுப்பீரென்று
தேற்றியிரு கைகுவித்து வணங்கித்தாழ்ந்து
சேவடியில் வீழ்ந்துதுதி செய்கின்றாளே.

பதம்-ராகம்-மணிரங்கு-தாளம் சாப்பு

பல்லவி.

சரணமென் ப்ராணநாதா ஸரோருகமலர்ப் பாதா

அநுபல்லவி.

அருள்செய்திடுவீர் நீரே அஞ்சலென்று ஆளுவீரே (சரணமென்)

சரணங்கள்.

தருணவரப்ரஸாதா தஞ்சம்வேறுண்டோ ஓத
பிரிவேனோவென்றும் நீர்தான் பிழைபொறுப்பது ஆர்தான்
அரவணைப்பீர்நான் பேதை
அறிவில்லாத அனாதை. (சரணமென்)
பேதைமதியாலே தீதே பிதற்றினேன் அறியாதே
ஏதும்பொறுப்பீ ரிப்போதே ஏழையானயென்றன் மீதே
குரோதஞ் செய்யவேண்டாம் நீரே
கொண்டணைத்துரெட்சிப் பீரே (சரணமென்)
தேவரீர் மகிமைகண்டேன் சிவபூஜைக்கன்பு கொண்டேன்
பாவமான மொழிவிண்டேன் பாரியான் உமதுதொண்டே
ஆவல்தீர்த்து மதியோதி
ஆளுவீர்நான் அபராதி (சரணமென்)

விருத்தம்.

துதித்தவளுக் கிரங்கியரன் கிர்பைக்குமஞ்சித்
தோகையுடன் ஸத்யகிரீ சனையுமன்பு
பதித்துயரும் வேணுவனே சுவரியையுந்தாள்
பணிந்தெழுந்து அனுக்ஞைபெற்று மீண்டார்கீழ்பால்
உதித்ததொரு கனகமாளிகைதான்ஸூர்ய
உதயம்போ லெதிர்கண்டா ரதனுட்சென்றார்

நிதித்தொகையு மாடையா பரணம்யாவும்
நிறைந்திடக்கண் டணிந்ததனில் நிதம்வாழ்ந்தாரே.

பதம்-ராகம்-தர்பார்-தாளம்-ஆதி.

பல்லவி.

சிவதாஸர் வஸித்திருந்தார்-சத்யகிரியிற்
சிவதாஸர் வஸித்திருந்தார்

அநுபல்லவி.

நவமாளிகையில் மேவி நாரியுடன் குலாவி. (சிவதாஸர்)

சரணங்கள்.

சத்யகிரீ சுவரரைத்தரிசித்து நேசித்து
நித்யமூன்று காலமும் நியமமாய்ப் பூஜித்து (சிவதாஸர்)
இந்திர போகம்போலே எவரும் புகழவுற்று
ஸந்தான ஸௌபாக்ய ஸகல கண்யமும்பெற்று (சிவதாஸர்)
சிவதாஸபுரமென்று சிறந்தவூரொன் றுண்டாக்கி
எவருஞ்சூழ்ந் திறைஞ்சவே இன்பமாக நோக்கி (சிவதாஸர்)
மிக்கசிவ தர்ம்மங்கள் மேன்மையதாகக் காட்டித்
தக்கவர் புகழ்ந்திட ஸத்யத்தைநிலை நாட்டி (சிவதாஸர்)
யாகாதி கிர்த்தியங்கள் யாவும் நடத்திக் கொண்டு
தேகாந்தம் பாரியுடன் சிவஸாயுஜ்யங் கண்டு (சிவதாஸர்)

விருத்தம்.

பக்தியாய்ச்சிவ தாஸர்பலம்பெறு
வித்தியாய்ஸ்தூல தேகத்துடனன்று
நத்திவாழ்வுற்ற நாரியுந் தாமுமாய்
முக்திபெற்றா முனிவரும்போற்றவே.

சிவதாஸர் முக்திபெற்ற அத்தியாயம் முற்றிற்று.

ஆக. விருத்தம்-கரு. கீர்த்தனை-கச.

நான்காவது

சந்திரன் வரம்பெற்ற அத்தியாயம்.

விருத்தம்.

சிவதாஸர் சரித்திரங்கேட் டுடல்பூரித்துத்
தியானித்துச் சத்யகிரீ சரைஸ்துதித்துத்

தவமுனிவர் ஸூதனைப்பார்த் தும்மைப்போல்யார்
சாற்றுவர்காண் சிவதாஸர் நாரியோடு
பவமாற்றி முக்திபெற்ற துரைத்தீர்சந்திர
பகவான்வந் திங்குபூ ஜித்தாரென்று
நலமாய்முன் னேதினீர் அதனையின்று
நவிலுமெனச் சூதமுனி நாட்டுவாரே.

அகவல் ராகம்-ஆரபி தாளம்-ஆதி.

சந்திரன் றனக்குத் தக்ஷன்பெற்ற
இந்து நுதலார் இருபத்தேழாம்
அசுவதிமுதலா மழகுளமாதரைத்
திசைபுகழ்ந்திடவே திருமணஞ்செய்து
மருவும்நாளில் மாதரில்ரோகணி
திருவொப்பான திவ்யஸௌந்தரி
அவளிடம்மோகித் தணைந்துமற்றவரை
யெவளவுமெண்ணு திகழ்ந்துமறந்தான்
கற்பாமவர்கள் கணவனுக்கஞ்சிப்
பொற்பாம்ரோகணி புகலுமேவல்
ஆளாய்வருந்தி அங்கம்நொந்தனங்க
வேளால்விரகம் மீறியோதுவரே.

பதம்-ராகம்-மாஞ்சை தாளம்-சாப்பு

பல்லவி.

ஓகோமதா கோபியாதே யெங்கள்
தேகமெலிந்தோம் இப்போதே (ஓகோ)

அநுபல்லவி.

நீகாரெங்கள்பதிவிரோதி யாய்நேர்ந்துசெய்கிறான்உபாதி (ஓகோ)

சரணங்கள்.

புஷ்பபாணம் யினி யெடாதே ஸர்ப்பமாந்தென்றல் விடாதே
புருஷோத்தமநீயே கண்டு பொறுத்தாளுவாய்புண்ய முண்டு (ஓ)
ஸ்ரீஸயின்யாதிப மித்ரா ஜகரெக்ஷகர்த்தன் புத்ரா
துவேஷமேனிதெங்கள் மீதே துரையேபெண்பழி தீதே (ஓகோ)
ஏழைநாங்களா மாதரி யெங்களுடனே மாதரி
தாழ்வடைந்தோமெங் கள்விதி ஸாமிநின்சர ணகதி (ஓகோ)

விருத்தம்.

வேளையிவ்விதம் வேண்டிப்புலம்பியே
யாளுமாதர வற்றவராகியே
நாளின்மாதர் நயந்தொருநாள் தந்தை
தாளில்வீழ்ந்து தயங்கியுரைப்பரே.

பதம்-ராகம்-மணிரங்கு-தாளம்-ஆதிசாப்பு.

பல்லவி.

தந்தையேநாங்கள் படும் சிந்தையே கேளாய்

அநுபல்லவி.

எந்தையே நொந்தோமெங்கள் சிந்தையே யாளாய்

சரணங்கள்.

தங்கையாம்போகணியே யெங்கட்குமேலாளே
யெங்களைவெள்ளாட்டிமார்போற் பங்கஞ்செய்கிறாளே
அங்கேபினிநாங்கள்போகோம் இங்குமதுதானே
செங்கையாற்றொழுதோமய்யா அங்கேபிந்தநாளே (தந்தை)

நித்யமிவட்கேவல்செய்து எய்த்திளைத்தோம்என்னே
மெத்தையிற்படுத்தவர்கள் நித்ரைசெய்தபின்னே
சற்றுறங்குவோம்விடியும் ஒத்தெழுந்துமுன்னே
பெற்றிடவேணுமவர்கள் உத்தரவுதன்னே (தந்தை)

அந்தரங்கமுஞ்சுகமுஞ் சொந்தமும்நல்லூணுஞ்
சந்தனமும்பூவுமெய்க்குச் சந்தசெம்பொற்பூணும்
அந்தமாமவளுக்கேயு கந்துதவத்தோணும்
வந்துநாங்கள்தூரவில் விழுந்தழுந்தவேணும் (தந்தை)

விருத்தம்.

தாரகைமாதர்கள் சாற்றவேதக்ஷன்
நேருறச்சினமொடு நிகழ்த்துசாபத்தாற்
காருடலாகியே கலாநிதியஃது
தீர்மேதினியிற் றிரிந்துநொந்தனனே.

பதம்-ராகம்-பூரிகல்யாணி-தாளம்-ஆதிசாப்பு.

பல்லவி.

நொந்தான் தக்ஷனுடசா பந்தான்றுடாச் சந்திரன்

அநுபல்லவி.

சிந்தாகுலமாயாரும் நிந்தனைசெய்திடவே
அந்தமொழிந்திந்தவைய கந்தனிலேவந்தலைந்து (நொந்)

சரணங்கள்.

அங்கமுழுவதுங்க ளங்கமிகுந்தொளிபோய்
மங்கயிருண்டுதேய்ந்து பங்கமதாகலைந்து
மங்கையர்கள்தங்கள்வத னங்கள்நிகருங்கனம்போய் (நொந்)

கண்டவர்யாரும்அரு கண்டஅருவிருப்புக்
கொண்டவனுகிநாணி மண்டலவுடல்கோணி
அண்டம்நவகண்டமிந்த மண்டலமுங்கண்டிரங்க (நொந்)

தஞ்சமொருவரற்றுப் பஞ்சையாகித்துக்கித்து
நெஞ்சமதனிற்றுயர் மிஞ்சவேநக்ஷத்ர
வஞ்சியரைநஞ்சமென அஞ்சவேசெய்தபாவத்தால் (நொந்)

விருத்தம்.

நொந்துசந்திரன் ரோகணியேங்கவே
நிந்தையாகியே நீங்கிப்பிப்பாரினில்
வந்துமெய்ய மலையினிலீசரைச்
சிந்தையிலெண்ணிச் செய்தான்றவமிதே.

பதம்-ராகம்-சுருட்டி-தாளம்-திரிபுடை.

பல்லவி.

சந்திரனிங்கு மாதவம் புரிந்தவிதமிது முனிவோரே கேட்பீரே.

அநுபல்லவி.

தன்சாபந்தீரும் ஸ்தானமிதுதானென்று கொண்டாடிவந்த
ஜடாதீர்த்தத் தாடி
ஸத்யகிரீச அரசம்போசரணஞ் சரணமென்றுநாடி (சந்திர)

சரணங்கள்.

அங்கமெங்கும்விபூதி யணிந்தொளி விளங்கவே ருத்
ராட்சமாலைதரித்து பஞ்சாக்ஷரத்தை ஜபித்து
அன்பாய்முன்பாய் நின்றே கிரிவலம்
ஆயிரங்கள்சூழ்ந்து மனதபிலாசைகொண்டு தாழ்ந்து
அம்பிகையையரனை நம்பி அனவரதம்
அசனம்நித்ரை யொழிந்து
பஜனைமெத்த மொழிந்து. (சந்திர)

புஷ்கரணியொன்றுதன்பேர் நிற்கலிங்கமொன்று கண்டு
போற்றிப்போற்றிப் புகழ்ந்தே பூஜைசெய்
தேத்தியேத்தி மகிழ்ந்தே
போதானுதா வேதாமுரகரி
பூஜிதா ஸர்வேசா சுபகரபூதரப்ரகாசா
புண்டரிகசரண சங்கர அர அர
புனிதவென்றுதுதித்து மனதிலென்றுமதித்து. (சந்திர)

நித்ரையுமாகாரமு மொழித்துபர் தேகாபிமானம்
அற்றுஇருகண்கள்மூடியே யேகாக்ர
சித்தமாகநின்று நாடியே
உமைபாகரையே மனமீதசையர்
துறுதியாகவைத்து நினைவற
மறுவிகாரமற்று
உம்பருமகிழவுற அன்பொடு மிருகங்களும்
ஒட்டிஉரசிமொய்க்க நட்டமரம்போல் மெய்க்க. (சந்திர)

விருத்தம்.

ததித்தவஞ்செய்யச் சத்தியகிரீசுவரர்
உதித்தனரெதி ரும்பர்கள்துந்துபி
யதிர்த்தியாற்றெளிந் தந்தமாமதி
துதித்தீசரைத் தொழுதுபோற்றினன்.

பதம்-ராகம்-காபி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

அரதேவதேவேச அரஅரஸத்யகிரீச அர

சந்திரன் வரம்பெற்ற அத்தியாயம்

அநுபல்லவி.

வரமேவுணுவனேசுவரி வாமாவெரூநாமா அர (அரதேவ)

சரணங்கள்.

கங்காதரவிர்ஷபாரூட கமனீயத்ருணேத்ரா அர
ஸ்ரீங்காரகல்யாணனந்த திவ்யாத்புதகாத்ரா. (அரதேவ)
சர்ம்மாம்பரவிஷகந்தர தரஸர்ப்பாபரண அர
பிர்ம்மாச்சுத ஸுரவாஸவ ப்ரமுகார்ச்சித சரண. (அரதேவ)
ஸச்சிதானந்த நித்யபூர்ன ஸதோதயப்ரபா கரா அர
நிச்சிதார்த்த நிரந்தராநிகமாகமாநிர்வி கார! (அரதேவ)
ஸர்வஜீவ தயாபராஜக தாதாரஸர் வேசா அர
பர்வதாத்புத சாபா அரி பாணகை லாஸா. (அரதேவ)
பக்தவத்ஸல பாவமோசன பரமார்த்தஸ்வரூபா அர
நித்யநிஷ்கள நிர்மலாநிச நிர்க்குணப்ரதாபா. (அரதேவ)
காலகால கபாலாஜகா காராநட லோலா அர
பாலநேத்ர புராந்தகாபரி பாலா அனு கூலா. (அரதேவ)
ரெக்ஷரெக்ஷ கிருபாநிதே ரெக்ஷரெக்ஷ ஜகத்விபோ அர
ரெக்ஷரெக்ஷ பசுபதே ரெக்ஷரெக்ஷமகப்ரபோ. (அரதேவ)

விருத்தம்

ஸ்தோத்திரஞ்செய் சோமனைப்
பார்த்துவந்து பரன்கிர்பா
நேத்ரஞ்செய்து நீடருள்
பூத்திரங்கிப் புகல்வரே.

பதம்-ராகம்-கமாசு-தாளம்-ரூபகம்.

பல்லவி.

இந்தரவரந் தந்தோம் உனக்கிதமாகவே வந்தோம்

அநுபல்லவி.

சந்த்ரா அத்ரி புத்ரா யினித்தயங்கர்தேநம் மித்திரா (இந்தா)

சரணங்கள்.

உன்கோமளமேனி ஒளி யோங்கும் இனிமேல்நீ
ஸ்ரீங்காரமாய்மேவு இருள் சிதைந்தோட உலாவு (இந்தா)

நமதுஜடைமீது கங்கை நதியோடலைமோது
அமிர்தமயமாவாய் அண்டரருந்த நிதம்யீவாய் (இந்தா)
தக்ஷன்பயம்நீங்கு யார்க்குந் தான்மேலாகியோங்கு
நக்ஷத்ரமின்னுரை யெல்லாம் நயந்தணைவாய்நேரே (இந்தா)
உன்னாற்செய்ததடமே உயர் வுளலிங்கமிவ்விடமே
யென்னாளுமுயருமே உயர்ந்தெவர்க்குமுத்திதருமே (இந்தா)

விருத்தம்.

வரமீய்ந்து தம்சடையின் நதிமேல்வெண்டா
மரைபூத்த தெனத்தரித்தார் விண்ணோர்மெய்ய
புரமீது தேவதுந் துபிமுழக்கிப்
புஷ்பமா ரிகள்பொழிந்தார் பூரித்தீசர்
சிரமீது சிவசிகா மணியாயாரும்
ஸேவிக்க மேலாகிச் சிறந்து சந்திரன்
அரனால்விண் ணோர்க்கமிர்த மீந்துவிண்மேல்
அவன்மாத ரெவரோடு முலாவினனே.

விருத்தம்.

உலாவுசந்த்ர புஷ்கரணி யென்றும்லிங்கம்
உயர்வான மாமதி மயேசரென்றும்
குலாவுரா ஜேசுவரியென் றும்பேர்கூறிக்
கொண்டாடிப் பூசித்துக் குற்றந்தீர்ந்து
நிலாவிறைவன் வரம்பெற்ற திதைக்கண்டாலும்
நேசித்துப் பணிந்தவர்கள் நிமலரன்பால்
கலாதரன்போல் மேன்மையுற்று இகபரத்தும்
காசினியும் விண்ணுமெய்க்கக் கதிப்பர்தாமே.

சந்திரன் வரம்பெற்ற அத்தியாயம் முற்றிற்று.
ஆக விருத்தம்-அ கீர்த்தனை-௩ அகவல்-க.

ஐந்தாவது

அரிச்சந்திரன் வரம்பெற்ற அத்தியாயம்.

விருத்தம்.

சந்திரன்றன் மேன்மைபெற்ற துரைக்கக்கேட்டுத்
தாபதர்ஸூ தரைப்புகழ்ந்து ஸத்யவெற்பில்

முந்திஅரிச் சந்த்ரன்வந்து கிர்பாநோக்கத்தால்
முனிவிசுவா மித்ரர்வஞ்ச மொழிந்தானென்றீர்
அந்தவிதமுரையுமெனப் பண்டயோத்தி
பரசாண்ட அரிச்சந்திரன் தீர்த்தயாத்திரை
வந்துதவஞ் செய்தஸுத னடையவேண்டி
மாதுசந்திர மதியிடத்தில் வசனித்தானே.

கண்ணிகள்.

ராகம்-தனசரி தாளம்-திரிபுடை.

சந்திரமதியே யெந்தன்நிதியே
தருணமிர்து மதுரவசன ஸுகுணநய பாக்யசாலி அனுகூலி (க)
யெந்தனுரையே கேளாய் பெண்துரையே
இதமுளவரநதி யதுதனில்மூழ்கி வருவேனேயானே (உ)
ராஜராஜனே யெந்தன் ஆசைநேசனே
ரவிகுலகனவர புஜபெலஜெயசிகா மணியேயெந்தன் அணியே (௩)
தேசம்புகழும் பிரகாசந்திகழுந்
திடமுயர்வுள நரபதியேநீ நதிமூழ்கச்செல்வ தேதுஎன்னஒது (௪)
கேளாய் மயிலே யிளங்குயிலே
கிளேவளர்ஸுதனது பெறவுயர் தபமது தானே செய்வேனே (௫)
வாளார்விழியே மதுமொழியே
வருகிற வரையினி லரண்மனை தனிலுறைவாயே நீயே (௬)
பிராணநாதனே மனுநீதனே
பிரியஅறியேன் அரண் மனையிது தனிலேயே தனியாயே (எ)
இரேனே பின்னே வருவேனே நான்தானே
இருவருமுயர்தவ மதுசெய்துசுதனடை வோமேநாமே (அ)

விருத்தம்.

சந்திரமதிமாதிவையுரைத்து ஸ்தலயாத்திரைக்குத்தம்பதியா
யிந்தவுலகிலெவருஞ்செல் வதுவேயியல்பென்றிடவன்று
அந்தமாதினுடன்ரதமூர்ந் தளவில்படைகள்சூழவெழுந்
தெந்தஸ்தலமுங்கண்டுதொழ வேகாசியில்முன்வந்தானே.

பதம்-ராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

ஸ்தலமெதுவுந் தர்சித்தாரே கண்டு நேரேநேரே

அநுபல்லவி.

நலமருள் கங்கை நதிநாடியாடி (ஸ்தல)

சரணங்கள்.

விசுவேசுரர்விசா லாட்சியைப்பணிந்து
திசைபுகழ்ந்திடவேதென் றிக்கில்வரத்துணிந்து (ஸ்தல)
ஸ்ரீசைலந்திகழுங் காளஅஸ்தி
ஈசர்பதந்தொழுதே கிரிசுத்தி (ஸ்தல)
திருவொற்றியூரொடு திகழாலங்காடு
அருகுற்றகாஞ்சி யருணாசலமோடு (ஸ்தல)
திருக்கழுக்குன்றம்விர்தா சலஞ்சிதம்பரமே
பெருக்குஞ்ஸ்ரீகாழி வயித்தீசுவரமே (ஸ்தல)
மாயூரமத்தியார்ஜுனம் வளர்கும்பகோணம்
ஆயுமுயர்சாமிமலை அய்யாறெனும்ஸ்தானம் (ஸ்தல)
காவேரியாடி கனபக்திகொண்டு
ஆவலாய்த்திருவானைக் காவலைக்கண்டு (ஸ்தல)
மாதர்பூதேசுவரர் மலரடிபணிந்து
ஓதும்ரெத்னகிரீசு வரரருளணிந்து (ஸ்தல)
திகழும்வியாக்ரபுரந்தென்கோகர்ன்னம்
புகழும்நாகநாத புரங்கண்டுயின்னம் (ஸ்தல)

விருத்தம்.

நாகநாதக்ஷேத்ரம் பணிந்துபோற்றி
நாடிஞன்தென்திசையை முன்செய்புண்ய
மாகவெதிர்கண்டானிச் சத்யவெற்பை
யதிசீக்கிரமாகவந்து அரனுமானு
மேகவுருவானதுபோ லிருக்கக்கண்டு
எழிற்சடாதீர்த்தத்தி லாடியன்பாய்
மாகர்புகழ்ஸத்யகிரீசு வரரைவேணு
வனேசுவரியைநமஸ்கரித்து வழுத்துவானே.

பதம்-ராகம் கமாசு-தாளம் திரிபுடை.

பல்லவி.

ஸத்யகிரிநாதா

அநுபல்லவி.

பக்தர்க்கருள்போதா முக்திதருநீதா

சரணங்கள்.

ஆதிபராத்பரனே யனுதியானஅரனே
ஜோதியேஸர்வேசா சுபகரகைலாஸா (ஸத்ய)
ஸத்யஸ்தாபிதனே சங்கரிக்கிதனே
நித்யசிவதாசரை ரெட்சித்தப்ரகாசனே (ஸத்ய)
சந்திரன்றனைத்தேற்றி ஜடையின்மீதேற்றி
வந்தனைகொண்டவனே வரம் அருள்பவனே (ஸத்ய)

விருத்தம்.

இவ்வாறுதுதிசெய்து பத்னியோடு
மிருந்துமாதவஞ்செய்தா னீசரன்பாய்
அவ்வேந்தனெதிர்விர்ஷபா ரூடராக
வம்பிகைவேணுவனேச் வரியாளோடு
திவ்வியமிர்கவரபரசு அஸ்தசுத்த
தேஜோமயானந்த ஸ்வரூபங்காட்ட
அவ்வடிவைக்கண்டுசந்திர மதியினோடு
அரிச்சந்திரன்மிகஸ்தோத்ர மதுசெய்தானே.

கண்ணிகள்

ராகம்—வாசஸ்பதே தாளம்-ரூபகம்.

ஸத்யமாமலேவாஸ வேணுவனேசுவரி வரநாயகா
நித்யசுத்தநிராமயா நிரஞ்சனமாதவ ஸாயகா (க)
சந்திரசூடகங் காதராஸுரசார ஞதிஸுரேந்திர
வந்திதாத்ருபு ராந்தகா அரவாம தேவாசாந்தா (உ)
நாககங்கண நாகசாப பிஞகதாரணதீரா
சோகநாசன பாபமோசன ஸ்தூலகாலஸம்மாரா (ங)

விருத்தம்

அரிச்சந்திரனிந்தவிதந் துதிக்கநோக்கி
யருள்புரிந்துஸத்யகி ரீசரன்று
விரித்தபுகழுள்ளநீ வேண்டுவண்ணம்
விளங்குமுயர்ஸுதன்பெருவாய் விசுவாமித்ரர்
தரித்தபுகழ்வதிஷ்டரொடு வாதாயுன்னைச்
சஞ்சலத்துக்குட்செய்வார் அதனுக்கஞ்சாய்
பரித்தபுகழ்வாய்மையால் வெல்வாய்காசிப்
பதியில்நாமேவந்து பாலிப்போமே.

விருத்தம்.

என்றுபரனருள்புரிய மகிழ்ந்துபோற்றி
யிதமானசந்திரமதி யுடனெழுந்து
அன்றுரதமூர்ந்துஸே னையுடன்சென்று
அயோத்தியிலுற்றரும்ஸுதன்பெற் றழகாய்வாழ்ந்தான்
என்றுமெனச்சூதமுனி கூறக்கேட்டு
யெழில்முனிவோர்யாவர்களும் ஸூதர்தம்மைத்
துன்றுமாஸனத்தேற்றி வரிசைசெய்து
துதித்தங்குவாழ்ந்திருந்தார் துறவோர்தாமே.

அரிச்சந்திரன் வரம்பெற்ற அத்தியாயம் முற்றிற்று.

கவித்தொகை விருத்தம்.

சத்யகிரீசர் ஸ்தலபுராணம் ஈது
சாற்றுவடநூலை உயர்தமிழால்க்கூற
அத்தியாயங்களைந்துவிருத்தம் நாற்பான்
ஆறுவெண்பாவிரண் டகவலொன்று யாரும்
பத்தியாய்ப்பாடு கீர்த்தனங்கள் நாற்பான்
பகர்ந்ததொகை இவ்விருத்தத்தோடுதொண்ணூறுஞ்
சுத்தியா மழவைநக ரதனிலுற்ற
சுப்ரமண்யக் கவிமறையோன்சொன்ன தாமே.

வாழி விருத்தம்.

வாழிசத்ய கிரீயீசர் வாழி வேணு
வனேசுவரியாள் வானமா மதீசர்வாழி
வாழிவளர் ராஜரா ஜேஸ்வரியாள்
வாழிமெய்ய புரம்வாழி மறைகள்நான்கும்
வாழிகோ ப்ராமணர் மன்னர்செங்கோல்
வாழிமழை பொழிந்துவையஞ் செழிக்கவாழி
வாழி மழவைச்சுப்ர மண்யவிப்பிரன்
வழுத்துதமி ழிவைகேட்போர் வாழிதானே.

ஆ. விருத்தம்-எ கீர்த்தனை-ச.

ஆ. கவித்தொகை-கூய.

திருமெய்ய ஸ்தலபுராணக்கீர்த்தனை முற்றிற்று.

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
11	17	வாக்கே	வாக்கெ
17	6	ஸெதாத்திரர்	ஸ்தோத்திரர்
,,	10	அஜநிபாாமவர்	அஜநிபராமவர்
26	9	கய	ய
31	15	கிரந்த	சிரந்த
33	9	சிந்தையே	நிந்தையே
35	20	மனமீதசையர்	மனமீதசையா
36	26	இந்த்ர	இந்தா
39	11	விர்தாசலஞ்	விர்த்தாசலஞ்

ஆவணக்காப்பக
சென்னை-600 008
U49042
Q73:4
N29